# தமிழர் பொருண்மியம்

வாரமலர்

TAMILS ECONOMY

விலை - 100/= | இதழ் - 65 | 14.04.2024


# கச்சதீவுக்கு பதிலாக இந்தியா பெற்ற Wadge Bank







உள் மோசடி : வளர்ந்து வரும் அச்சுறுத்தல்! 10



கடின உழைப்பு நேர்மையான முதலாளியை உருவாக்குகிறது 12



வேர்க்கடலைச் செய்கையில் அதிக இலாபம் பெறுவதற்கு.. 16

# மாணவரைப் பாடசாலைகளில் தக்கவைத்துள்ள “ஐயமிட்டுண்”

**நேர்கண்டவர் - பார்த்தீபன்**

“வறுமை கல்விக்கு தடையாக இருக்கக்கூடாது என்ற நோக்கத்துடன்தான் ஐயமிட்டுண் என்ற திட்டத்தை நாம் பாடசாலைகளில் முன்னெடுக்கின்றோம். பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட போது பெருமளவு மாணவர்கள் இடைவிலகுவதை அவதானிக்க முடிந்தது. அதற்கான காரணத்தை ஆராய்ந்து அதனைத் தடுத்து நிறுத்தி அவர்களை தொடர்ந்தும் பாடசாலைகளில் தக்கவைப்பதில் இந்தத் திட்டம் வெற்றியளித்துள்ளது” என்று கூறுகின்றார் ஐயமிட்டுண் என்ற திட்டத்தை செயற்படுத்தும் செல்வராஜா முரளீதன்.

அவுஸ்திரேலியாவிலிருந்து “ஈ- கல்வி” திட்டத்தை கடந்த ஒரு தசாப்தமாக செயற்படுத்தி வரும் அவர், பொருளாதார நெருக்கடியின் பின்னர் கல்வியில் மாணவர்களை தக்கவைப்பதற்காக ஆரம்பித்ததுதான் ஐயமிட்டுண். அண்மையின் தமது செயற்திட்ட முன்னெடுப்பை நேரில் பார்வையிட்டு வழிநடத்துவதற்காக யாழ்ப்பாணம் வந்திருந்தார். சமூகத்துக்கான சேவைகளுக்காக அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் பல வருதுகளையும் அவர் பெற்றவர்.

அவர், தமிழர் பொருண்மியம் வாரஇத முக்கு வழங்கிய நேர்காணல் வருமாறு-

**கேள்வி -** ஐயமிட்டுண் என்ற இந்த திட்டத்தை நீங்கள் எப்போது, எதற்காகத் தொடங்கினீர்கள்?

**பதில் -** ஐயமிட்டுண் என்ற இந்த திட்டம் இலங்கையில் பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்த போது இதனை ஆரம்பித்தோம். பாடசாலைகளுக்கு இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்பட்டது கடந்த ஜூலை மாதத்தில்.

கடந்த பத்துவருட காலமாக கல்வித் திட்டங்களை இலங்கையில் மேற்கொண்டுவருகின்றேன். இதனை தொடர்ந்து செய்துவந்தமையால் எனக்கு பல அனுபவங்கள் உள்ளது. கோவிட் 19, அதனைத் தொடர்ந்துவந்த பொருளாதாரப் பிரச்சினையினால் மாணவர்கள் பாடசாலைகளைவிட்டு விலகுகின்ற ஒரு ஆபத்தான நிலையும், அவர்கள் சிறுவர்களாக வேலைக்கு அமர்த்தப்படுகின்ற ஒரு நிலையும் உருவாகியது. இவ்வாறு இடைவிலகிச் செல்லும் மாணவர்களை கல்வியில் தக்க வைப்பதற்கு இருந்த ஒரேயொரு வழி இவர்களுக்கு உணவைக் கொடுப்பதுதான்.

ஏற்கனவே, நாங்கள் எமது பெற்றோர் ஸ்தானத்தில் இருக்கின்ற வயோதிபர்களுக்கு மந்திகை மருத்துவமனையில் அவர்கள் தங்கியிருந்து சிகிச்சை பெறும் போது உணவு, பழங்கள், உடைகள் போன்ற வற்றைக் கொடுத்து கோவிட் காலத்தில் அவர்களை பராமரித்திருந்தோம்.

அந்தத் திட்டத்தை நாங்கள் பாடசாலைகளுக்கு விஸ்தரித்து மாணவர்களுக்கு உணவைக் கொடுக்கும் ஒரு திட்டத்தை உருவாக்கினோம். ஔவை யாருடைய பசித்தவனுக்கு உணவைக் கொடுத்து நாம் உணவு உண்ண வேண்டும் என்ற கருத்தை செயல்வடிவப்படுத்தி ஐயமிட்டுண் பெயரில் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தியிருக்கின்றோம். எந்தவிதமான பிரதேச வேறுபாடுகளும் இல்லாமல் அனைத்துப் பகுதிகளுக்கு வறிய வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ள பெற்றோருக்கு இதனைச் செய்தோம்.

**கேள்வி -** இப்போது எத்தனை பாடசாலைகளில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது?

**பதில் -** எங்களுடைய கல்வித் திட்டத்தைப் பொறுத்தவரையில் நுற்றுக்கும் அதிகமான பாடசாலைகளில் அதனைச் செய்கின்றோம். ஆனால் உணவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் இலங்கை முழுவதிலும் சுமார் முப்பது பாடசாலைகளில் இதனைச் செய்கின்றோம்.

**கேள்வி -** உங்களுடைய இந்த ஐயமிட்டுண் திட்டத்தினால் எவ்வளவு மாணவர்கள் பயன்பெறுகின்றார்கள்?

**பதில் -** சுமார் 2,500 முதல் 3,000 வரையிலான மாணவர்கள் தினசரி உணவைப் பெற்றுக்கொள்கின்றார்கள். உண்மையில் நாங்கள் மாதிரியான செயற்பாடாகத்தான் இதனை முன்னெடுக்கின்றோம். மக்களுடைய விழிப்புணர்வு மூலமாக சமூகத்தில் இன்னும் மேலோங்க வேண்டும் என்ற நோக்கத்துடன் முன்னெடுக்கின்றோம். வடக்கு, கிழக்கு, மலையகம் போன்ற அனைத்துப் பகுதிகளிலும் இதனைச் செய்கின்றோம்.

**கேள்வி -** இதற்குத் தேவையான நிதி எவ்வாறு பெற்றுக்கொள்ளப்படுகின்றது?

**பதில் -** நிதியைப் பெற்றுக்கொள்வது கடினமானதுதான். இன்று ஒரு சாப்பாடு கடையில் வாங்குவதானால் 400 ரூபா தேவை. அதனால், அதற்கான பணத்தைச் சேகரித்து சாப்பாட்டுப் பார்சல் வாங்கிக் கொடுப்பது எம்மால் முடியாத ஒரு விடயம். அரசாங்கம் கூட ஆரம்ப வகுப்புக்கு மட்டும்தான் அதனைச் செய்வார்கள். நாங்கள் ஆறாம் வகுப்பிலிருந்து 11,12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கும் இந்தத் திட்டத்தைச் செயற்படுத்துகிறோம்.

அதேவேளையில், நாங்கள் சமூகத்தை இணைப்பதற்காக ஐயமிட்டுண் என்ற பாத்திரம் ஒன்றை உருவாக்கி, அதனை பாடசாலை அலுவலகத்துக்கு முன்பாக வைக்கிறோம். ஒவ்வொரு மாணவரும் தம்மாலியன்ற மரக்கறிகளை அதில் போட்டுச் செல்லலாம். அதுகூட கட்டாயம் அல்ல. அந்த மாணவர்கள் தாமும் இந்தத் திட்டத்தின் ஒரு பங்காளி என்ற பெருமை இருக்க வேண்டும். நாம் கையேந்திச் சாப்பிடவில்லை. நாமும் பங்களிப்பை வழங்கித்தான் சாப்பிடுகிறோம் என்ற மனப்பான்மை உருவாக வேண்டும் என்ற



செல்வராஜா முரளீதரன்

எண்ணம் அவர்களுக்கு வர வேண்டும். அதற்காகத்தான் இந்த அச்சய பாத்திரத்தை நாங்கள் உருவாக்கினோம். இது மாணவர்களைப் பெருமளவுக்கு ஊக்குவித்திருப்பதை இந்தக் குறுகிய காலத்தில் எம்மால் பார்க்க முடிந்தது.

நிதியைப் பொறுத்தவரையில் எம்மால் நூறு வீதம் கொடுக்க முடியாது. அந்த வகையில், இவ்வாறு மாணவர்கள் பெற்றோர்களின் பங்களிப்பு பெரும் துணையாக இருக்கும். அவர்கள் கொடுக்கும் மரக்கறிகளை வைத்து, அரசி, பருப்பு, சோயா இறைச்சி, எண்ணெய், உப்பு, தூள் போன்றவற்றுக்கு தேவையான நிதியை நாம் கொடுக்கின்றோம். இது உண்மையில் கூட்டாக இடம்பெறும் ஒரு செயற்பாடு. சமூகம் இணைகின்றது. அதிபர்கள் ஆசிரியர்கள் அதனை நடைமுறைப்படுத்துகின்றார்கள்.

கிடைக்கின்ற மரக்கறிகளை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு நாளும் பெற்றோர்கள்தான் சமைக்கின்றார்கள்.

இதில் பணப்பரிமாற்றம் எதுவும் இல்லை. பெற்றோரின் உழைப்பு, அதிபர்களின் உருங்கியைப்பு என்பனதான் இதன் செயற்பாட்டுக்கு காரணமாகிறது.

அதேவேளையில், பாடசாலைத் தோட்டங்கள், வீட்டுத் தோட்டங்கள் என்பனவும் உருவாக்கப்பகின்றன. ஊக்குவிக்கப்படுகின்றன. இதற்கு மேலாக ஐயர்மார் தமக்குக் கிடைக்கும் மரக்கறிகளை பாடசாலைகளுக்குத் தருகின்றார்கள். செல்வந்தர்கள், வர்த்தகர்கள் தமது பங்களிப்பை வழங்குகின்றார்கள். சமூக இணைப்பின் மூலமாக இந்தத் திட்டம் செயற்ப டுத்தப்படுகின்றது. சில பாடசாலைகள் எங்களுடைய பங்களிப்பு எதுவும் இல்லாமலேயே செயற்படத் தொடங்கியுள்ளார்கள். இதனால், ஒரு சாப்பாட்டுக்கு 20 ரூபாவுக்குள்தான் செலவிட வேண்டிய








தேவை இருக்கின்றது.

நானும் இதற்கான பங்களிப்பை வழங்குகிறேன். இந்தத் திட்டத்தைப்பற்றி அறிந்த நண்பர்கள் பலரும் இதற்கு உதவுகிறார்கள். இதனால், நிதி விடயத்தை நாம் இலகுவாக சமாளிக்க முடிகிறது. வறுமை கல்விக்கு தடையாக இருக்கக்கூடாது என்ற நோக்கத்துடன்தான் இந்தத் திட்டத்தை நாம் முன்னெடுப்பதால், இதனை வெற்றிகரமாக எம்மால் செயற்படுத்த முடிகின்றது.

**கேள்வி -** இந்தத் திட்டத்தின் மூலமாக வீட்டுத் தோட்டங்கள், பாடசாலைத் தோட்டங்களைச்செய்வதற்கு மாணவர்களை ஊக்குவிப்பதாக அமைந்திருப்பதாகச் சொல்லலாமா?

**பதில் -** ஆம். அண்மையில் கல்வி வலையங்கள் ஊடாக பாடசாலைகளில் தோட்டங்களை சிறப்பாக செய்பவர்களுக்கு 1,50,000 ரூபா பரிசை வழங்கினார்கள். எமது ஐயமிட்டுண் செயற்திட்டத்தை செயற்படுத்தும் பாடசாலைகள் இந்தப் பரிசைப் பெற்றிருக்கின்றன. எமது இந்தத் திட்டத்தை செயற்படுத்தும் பாடசாலைகளின் தோட்டங்கள் மிகவும் வினைத்திறனாக இருந்தது. அதேவேளையில், பல மாணவர்கள் தாமும் இந்தத் திட்டத்துக்குப் பங்களிப்புச் செய்ய வேண்டும் என்பதற்காக வீட்டுத் தோட்டங்களிலும் அக்கறை காட்டுகின்றார்கள்.

**கேள்வி -** உங்களுடைய திட்டத்தைச் செயற்படுத்துவதற்குத் தேவையான பாடசாலைகளைத் தெரிவு செய்யும் போது எவ்வாறான நடைமுறைகளை நீங்கள் கடைப்பிடிக்கின்றீர்கள்?

**பதில் -** பாடசாலைகளை நாம் தெரிவு செய்யும் போது ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற, வளப்பற்றாக்குறையுள்ள, எல்லைக் கிராமங்கள், போரினால் பாதிக்கப்பட்ட கிராமங்கள் போன்றவற்றிலுள்ள பாடசாலைகள், மிகவும் நலிவடைந்த நிலையில் உள்ள பாடசாலைகள், பழைய மாணவர் சங்கங்கள் இல்லாத பாடசாலைகள் போன்றவற்றைத்தான் நாங்கள் தெரிவு செய்கின்றோம். இதற்கு அனைத்து கல்வி அதிகாரிகளும் கடந்த பன்னிரெண்டு வருடங்களாக எம்முடன் தொடர்பில் இருக்கின்றார்கள். கல்வி அமைச்சின் செயலாளர்கள், அதிகாரிகள் போன்றவர்கள் மூலமாகவும் எமக்கு சில பரிந்துரைகள் வரும். உதவி தேவையாகவுள்ள பாடசாலைகளையிட்டு அவர்கள் எமக்குத் தெரியப்படுத்துவார்கள்.

**கேள்வி -** பொருளாதார நெருக்கடியின் காரணமாக பாடசாலை இடைவிலகல் என்பது அதிகரித்திருக்கின்றது. உங்களுடைய இந்த ஐயமிட்டுண் நிகழ்ச்சித் திட்டத்தின் மூலமாக அது எந்தளவுக்குத் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது?

**பதில் -** எங்களுடைய திட்டம் செயற்படுத்தப்படும் பாடசாலைகளில் இரண்டு வாரங்களுக்கு ஒமுறை மீள்பரிசீலனை ஒன்றை மேற்கொள்கின்றோம். அதேவேளையில் அதிபர்கள் காலை 6.00 மணிக்குஎம்முடன்இணைந்துகொள்வார்கள். எமது முகநூலில் அவற்றை நாம் வெளிப்படுத்தியிருக்கிறோம். அதில் ஒவ்வொரு அதிபர்களும் தமது கருத்துக்களை வெளிப்படுத்தியிருப்பார்கள். அதன்போது மாணவர்களுடைய வரவு தொடர்பாக முக்கியமாக ஆராய்வோம்.

யாழ்ப்பாணம் கொட்டடியில் உள்ள ஒரு பாடசாலையில் நாம் இந்த திட்டத்தை ஆரம்பித்து இரண்டு வாரத்தில், ஒரு வருடமாக பாடசாலைக்கு வராத ஒரு சில மாணவர்கள் வரத்தொடங்கியுள்ளனர். அதேபோல, வசாவிளானில் உள்ள ஒரு பாடசாலை அதிபர் சொன்னார், முன்னர் பாடசாலை மாணவர்கள் மயங்கிவிழுடம் இடம்பெற்றதாக. இப்போது அவ்வாறான சம்பவங்கள் இல்லை.

இதனால் மாணவர்களின் நூறு வீதமான வரவை நாங்கள் பெரும்பாலான இடங்களில் சாத்தியமாக்கியிருக்கிறோம். மாணவர்கள் பாடசாலைக்கு வருவதும் அவர்களுக்கு உணவு வழங்கப்படுவதும் உறுதிப்படுத்தப்பட்டிருப்பதால் பெற்றோர் காலையில் அவர்களை கொண்டுவந்து விட்டுவிட்டு வேலைக்கும் செல்ல முடிகின்றது. அதேவேளையில் பாடசாலைகளிலிருந்து இடைவிலகி மாணவர்கள் வேலைக்குச் செல்வதையும் தடுத்திருக்கிறோம்.

இதில் இன்னுமொரு வெற்றியும் உள்ளது. மாணவர்கள் பாடசாலைகளுக்கு வந்து கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடுவதால் போதைவஸ்த்து பாவனை போன்றனவும் குறைவடைகின்றது. இளைய சமூகத்தின் கவனத்தை கல்வியுடன் வைத்திருப்பதால் இது சாத்தியமானதாகின்றது.

**கேள்வி -** இந்தத் திட்டத்தை மேலும் விஸ்த்தரிப்பதற்கான நோக்கம் இருக்கின்றதா?

**பதில் -** ஆம். நிச்சயமாக. தற்போதைய திட்டம் 50-60 வாரங்களைத் தாண்டும் போது நிச்சயமாக மேலும் சில பாடசாலைகளை இதற்குள் இணைத்துக் கொள்வோம். இது வளர வேண்டிய ஒரு திட்டம். வளரும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

**கேள்வி -** நீங்கள் ஏற்கனவே ஈ - கல்வி என்ற ஒரு திட்டத்தையும் நடைமுறைப்படுத்திக்கொண்டிருக்கின்றீர்கள். அந்தத் திட்டம் எவ்வாறுள்ளது?

**பதில் -** உணவைக் கொடுத்து மாணவர்கள், பெற்றோர் - ஆசிரியர்கள்-அதிபர்களிடையே நெருக்கமான உறவை ஏற்படுத்தும் போது எமது கல்விச் செயற்பாடுகளும் இலகுவாகின்றது. மாணவர்கள் பசி காரணமாக பாடசாலை களைவிட்டு 1.30 க்கு போனால் சாப்பாடு இருக்காது. சிலவேளைகளில் அவர்கள் தவறான பாதைக்குச் செல்வார்கள். அதனைவிட, பசியுடன் இருப்பதால் படிக்க மாட்டார்கள். படுத்துவிடுவார்கள். இப்போது நாம் உணவைக் கொடுப்பதால் கல்விச் செயற்பாடுகளில் அவர்களை ஈடுபடுத்த முடிகின்றது.

பெற்றோர் - மாணவர் - ஆசிரியர்கள் ஒத்துழைப்பு இருப்பதால் பாடசாலை முடிவடைந்த பின்னர், அதாவது 1.30 க்குப் பின்னர் மாணவர்களை பாடசாலைகளில் வைத்திருந்து பரீட்சைகளுக்குத் தயார்படுத்தல் போன்ற மேலதிக விடயங்களுக்கு நேரத்தை செலவிட முடிகின்றது. ஈ கல்வி செயற்பாடுகளை பல இடங்களில் நாம் ஏற்கனவே செய்து கொண்டிருந்தமையால் - இப்போது கல்விச் செயற்பாடு மிகவும் திறமையான முன்னெடுத்துச் செல்லக்கூடியதாக இருக்கின்றது.

உணவைக் கொடுப்பது கல்வியில் அதிகளவுக்கு ஈடுபாட்டை மாணவர்கள் காட்டுவதற்கு காரணமாகவுள்ளது.

மின்மடல் : tamilseconomy@gmail.com
தொலைபேசி : 0764438620

# வாய்ப்புகளும் நெருக்கடியும்!

பொருளாதாரத்தைப் பொறுத்தவரையில் இலங்கை ஒரு திருப்புமுனையில் இப்போது நிற்கிறது. பணவீக்கம், எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் பணமதிப்பிழப்பு ஆகியவற்றால் குறிக்கப்பட்ட பொருளாதார நெருக்கடி மில்லியன் கணக்கானவர்களுக்கு பெரும் சிரமத்தை ஏற்படுத்தியிருந்தது. ஆனாலும், விரக்தியின் மத்தியில், நம்பிக்கையின் ஒளிக்கீற்றை காணமுடிவதாக ஆய்வாளர்கள் சிலர் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

சமீபத்திய சர்வதேச நாணய நிதியத்தின் கடன் ஒப்பந்தம் தற்காலிக நிவாரணத்தை அளிக்கிறது. ஆனால் சீர்திருத்தங்களுக்கான அழைப்புடன் வருகிறது. அரசாங்கம் ஒரு முக்கியமான சோதனையை எதிர்கொள்கிறது – சமூக நலனை உறுதிப்படுத்தும் அதே வேளையில் சிக்கன நடவடிக்கைகளுக்கு வழிவகுப்பது. எந்தவொரு அரசாங்கத்துக்கு இது சவாலானதுதான்!

வெற்றி என்பது வெளிப்படைத்தன்மை, பொது நம்பிக்கை மற்றும் நீண்ட காலப் பார்வை ஆகியவற்றைச் சார்ந்துள்ளது.

உடனடி சவால்களுக்கு அப்பால், இலங்கை தனது பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பும் ஆற்றலைக் கொண்டுள்ளது. அதன் மூலோபாய இருப்பிடம், திறமையான பணியாளர்கள் மற்றும் வளமான கலாச்சார பாரம்பரியம் ஆகியவை வலுவான அடித்தளத்தை வழங்குகின்றன. நிலையான சுற்றுலா நடைமுறைகளை ஏற்றுக்கொள்வது, விவசாயத்தில் புதுமைகளை வளர்ப்பது மற்றும் வெளிநாட்டு முதலீட்டை ஈர்ப்பது ஆகியவை வளர்ச்சியின் முக்கிய உந்துதலாக இருக்கும்.

இருப்பினும், இதற்கு தீர்க்கமான நடவடிக்கை தேவை. இலங்கை அரசியல் ஸ்திரத்தன்மைக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும், ஊழலுக்கு தீர்வு காண வேண்டும், வணிகத்திற்கு உகந்த சூழலை உருவாக்க வேண்டும். வருங்காலத்தின் வெற்றிக் கதை சவால்களை எதிர்கொள்வதில் மட்டுமல்ல, மேலும் மீள் மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட பொருளாதாரத்தை உருவாக்குவதற்கான வாய்ப்பைப் பயன்படுத்துவதில் உள்ளது.

அதேவேளையில், இலங்கையில் தொடர்ந்து இடம்பெற்ற போரும், இன நெருக்கடிக்கு நிலையான தீர்வு ஒன்று காணப்படாதிருப்பதும்கூட இந்தப் பொருளாதார நெருக்கடிக்கு பாரிய பங்களிப்பைச் செய்துள்ளது என்பதை சிங்கள அரசியல் தலைவர்கள் இன்றுவரை ஏற்கத் தயாராகவில்லை. உறுதியான அரசியல் தீர்வுகாணப்பட்டால், புலம்பெயர்ந்த தமிழர்களிடமிருந்தே பாரிய முதலீடுகளை எதிர்கொள்ள முடியும்.

துணிச்சலான தலைமைத்துவம், மூலோபாய திட்டமிடல் மற்றும் கூட்டு முயற்சிக்கான நேரம் இது. ஐக்கியம் மற்றும் நீண்டகால தீர்வுகளுக்கான அர்ப்பணிப்பு ஆகியவற்றின் மூலமே இலங்கை இந்த நெருக்கடியில் இருந்து நிரந்தரமாக மீண்டு தனது மக்களுக்கு பிரகாசமான எதிர்காலத்தை உருவாக்க முடியும்.

## வாரம் ஒரு சிறு தானியம்-

# கல்லையும் பணிய வைக்கும் கம்பு

**பூரணி**



அரிசியைக் காட்டிலும், கனிமம், கால்சியம், புரதம், இரும்பு, உயிர்ச் சத்து என அனைத்துச்சத்துகளுமே அதிகம் கொண்ட தானியம் கம்பு! அரிசியை விட கிட்டத்தட்ட 8 மடங்கு அதிக இரும்புச் சத்து!

சிறுதானியங்களின் வரிசையில் கம்புக்கு எப்போதும் தனியிடம் இருக்கிறது,

வேகவைக்க கொஞ்சம் நேரமெடுக்கும் .இதனை சாதாரணஅரிசிபோல அப்படியே கழுவி வேகவைக்க முடியாது. இரண்டாக உடைத்து, இரண்டு மணி நேரம் ஊறவைத்து, அதன் பின் உலையில் போட்டு வேகவைத்தால்தான் நல்ல குழைவாக வரும். ஆனால், சுவையிலோ, பிற அரிசி வகையறாக்கள் கம்பின் பக்கத்தில் வர முடியாது. அத்தனை அருமையாக இருக்கும்.

வளரும் குழந்தைகளுக்கும் மாதவிடாய் துவங்கிய பெண் குழந்தைகளுக்கும் மாதம் 45 முறை கண்டிப்பாகத் தர வேண்டிய தானியம்.

பொதுவாக, கம்பு என்றாலே அதனைக் கூழாக, கஞ்சியாகத்தான் சாப்பிட வேண்டும் என்ற நினைப்பு நம்மில் பலருக்கும் உண்டு. ஆனால் கஞ்சியாக மட்டும் அல்ல் சாதமாக, அவலாக, பொரியாக… எப்படி வேண்டுமானாலும் கம்பைச் சாப்பிடலாம்.

அருமையான நாட்டுக் கோழி பிரியாணியோ, தம் பிரியாணியோகூட கம்பில் செய்து கலக்கலாம். கம்பை இரண்டாக உடைத்து, தண்ணீரில் ஊறவைத்து, அதற்குப் பின் நெல் அரிசியில் எப்படி பிரியாணி செய்கிறீர்களோ அப்படியே செய்ய வேண்டியதுதான். கோழி மீது இரக்கம் உள்ளவர்கள், பீன்ஸ், கேரட், சேர்த்து மரக்கறி பிரியாணியும் செய்யலாம்.

கம்பு ரொட்டி சர்க்கரை நோய் உள்ளவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம். கம்பில் உள்ள லோ கிளைசிமிக் தன்மையாலும், அதில் ஏற்கெனவே உள்ள கூடுதல் நார்ச் சத்தினாலும், காலைஃ மதிய உணவில் இதை எடுக்கும்போது பட்டை தீட்டிய அரிசிபோல், கம்பு ரொட்டியும் கம்பஞ்சோறும் பிரச்சனையைத் தராது.

அரிசியைப் போல் அல்லாமல், கம்பரிசி, உமி நீக்கிய பின்னரும் அதன் உள் பகுதியில் அத்தனை நல்ல விஷயங்களையும் தன்னகத்தே வைத்திருக்கும்.

சர்க்கரை நோயாளிகளுக்கும் எடை குறைக்க விரும்புவர்களுக்கும் மிக ஏற்றது.

தவிர, இதில் உள்ள “அமைலோஸ் அமைலோபெக்டின்’ அமைப்பு நெல் அரிசியைக்காட்டிலும் மாறுபட்டது. இன்னும் இறுக்கமானது. அதனால்தான், சீரணத்துக்கும் கொஞ்சம் தாமதமாகிறது.

இந்த அமைப்பினால் மெள்ள மெள்ளவே கம்பின் சர்க்கரையை ரத்தத்தில் கலக்கச் செய்வதால், லோகிளைசிமிக் உணவாக இருந்து சர்க்கரை நோயாளிக்குப் பெரிதும் உதவுகிறது. சத்துச் செறிவு அடர்த்தியாக உள்ள கனத்த உணவு என்பதால், என்னதான் பிடித்த குழம்பை, பிடித்த கையுள்ளவர் பரிமாறினாலும் கம்பு சாதத்தை ஒரு கட்டு கட்ட முடியாது. அளவாகச் சாப்பிடுவதால், எடை குறைக்க விரும்புவோருக்கும் இது ஓர் அற்புதத் தானியம்!

இன்று பலரும், நான் ““அரிசியே சாப்பிடுறது இல்லை என்பார்கள். அது தேவையே இல்லை. சர்க்கரை நோய்க்கான சரியான சிகிச்சையை உங்கள் குடும்ப மருத்துவர் ஆலோசனைப்படி எடுத்துக்கொண்டு, வாரம் இரு நாள் கம்பஞ்சோறு, இரு நாள் புழுங்கல் அரிசிச் சோறு, இன்னொரு நாள் தினை சாதம், இரவில் கேழ்வரகு அடை, எப்போதாவது காலை உணவாக வரகரிசிப் பொங்கல், சோள தோசை, குதிரைவாலி இட்லி என்று சாப்பிடப் பழகினால், வயிற்றைக் கட்டி போடும் வாழ்க்கை வாழ வேண்டிய அவசியம் இல்லை.

இப்படிப் பல தானியங்களையும் கலந்து எடுத்துக்கொள்வதுடன் கொஞ்சம் உடல் உழைப்பும் கொடுத்து வாழுங்கள். உங்கள் சர்க்கரை நோய் எப்போதும் கட்டுக்குள்ளேயே இருக்கும். கம்பு சிறந்த அம்பு போல உங்களை செயல் பட வைக்கும்.




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 1,81,950 ரூபா.**

**24 கரட் தங்கம் 1,98,500 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**




**கேள்வி -** நெருக்கடிகள் பிரச்சினைகள் புதிய வாய்ப்புக்களை உருவாக்கித் தரும் என்று சொல்வார்கள். இலங்கைப் பொருளாதார நெருக்கடி அப்படி என்ன வாய்ப்பை உருவாக்கித் தந்தது?

**சந்திரவதனா சுந்தரம்**
**வல்வெட்டித்துறை.**

**பதில் -** நிச்சியமாக. தீமையிலும் நன்மை உள்ளது என்பது உண்மைதான். ஆனால், சும்மா இருந்தால் எதுவும் நடைபெறாது. அதனைக் கண்டறிவதற்கான தேடல் அவசியம். படைப்பாற்றல் தேவை. இவற்றுடன் தொடர்ச்சியான உழைப்பு. கடந்த வாரம் தமிழர் பொருண்மியம் வார இதழில் முறைசாரா பொருளாதாரத்தின் எழுச்சி என்ற தலைப்பிலான கட்டுரை ஒன்று வெளிவந்திருந்தது. அது சொல்லும் கதையும் இதுதான். புதிய முயற்சிகளில் பலாஈடுபட்டுள்ளார்கள். புதிய வாய்ப்புக்களைத் தேடத் தொடங்கியுள்ளார்கள். அதில் கணிசமான வருமானத்தைப் பெறமுடியும் என்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

இதில் மட்டக்களப்பு இளைஞர் ஒருவரின் சாதனை இன்று முக்கியமாகப் பேசப்படுகின்றது. குறிப்பிட்ட இளைஞர் மென்பந்து கிரிக்கெட் விளையாட்டிற்கான துடுப்பாட்ட மட்டையை தயாரித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகின்றார். உதயகுமார் நிதர்சன் என்ற 30 வயதுடைய இளைஞனே தனது திறமையை உலகறிய செய்து சாதனை படைக்கின்றார்.

மட்டக்களப்பு செங்கலடி - கொம்மாந்துறை பகுதியை சேர்ந்த உதயகுமார் நிதர்சன் விளையாட்டுத்துறையில் ஆர்வம் உள்ளவர். இவர் சுமார் 07 வருடங்களாக விளையாட்டுத்துறை சார்ந்து, துடுப்பாட்ட மட்டை, விக்கெட், மரத்தினால் ஆன நினைவுச் சின்னங்கள், உள்ளிட்ட விளையாட்டுடன் தொடர்புடைய உபகரணங்களை மரத்தினால் செய்து வருகின்றார்.

காலப்போக்கில் அந்த முயற்சியால் இன்று தான் தயாரிக்கும் துடுப்பாட்ட மட்டை நாடுகடந்து சர்வதேசம் வரை செல்வதாக தெரிவிக்கின்றார். ஓரிரு துடுப்பாட்ட மட்டை தயாரித்து தற்போது ஆயிரக்ககணக்கில் தயாரித்து பாகிஸ்தான் நாட்டிற்கு ஏற்றுமதி செய்யும் அளவுக்கு மாறியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

பாகிஸ்தான் நாட்டில் இருந்த வருகை தந்துள்ள வெளிநாட்டவர்கள், சுமார் 6ஆயிரம் கிரிக்கெட் மட்டையை குறித்த இளைஞரிடம் செய்து தருமாறு தெரிவித்து அதை எடுத்துச் செல்ல அங்கேயே தங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அதுமட்டுமன்றி பாகிஸ்தான், ஜேர்மனி, இந்தியா, கனடா ஆகிய பல நாடுகளுக்கு இவரது உற்பத்திகள் செல்கின்றதாகவும் தெரிவித்தார்.

உண்மையில் அபாரமான முயற்சி. அவரது குடும்பத்துக்கும் நல்ல வருமானம். நாட்டுக்கும் அந்நியச் செலாவணி.

சமூக ஊடகங்களின் அதிகரித்த பாவனை இது போன்ற முயற்சியாளர்கள் தமது பொருட்களை சர்வதேச சந்தைக்குக் கொண்டு செல்வதற்கு உதவுகின்றன. நீங்களும் இது போன்ற ஏதாவது ஒரு முயற்சியில் இறங்கலாமே?

## கேளுங்கள் தருகின்றோம்

தமிழர் பொருண்மியம் வாசகர்கள் பொருளாதாரம் உட்பட அதனுடன் தொடர்புபட்ட தங்களுடைய கேள்விகளை - சந்தேகங்களை எமக்கு அனுப்பி வைக்கலாம். அடுத்த வாரம் முதல் அதற்கான களம் திறக்கப்படுகின்றது. உங்கள் கேள்விகளை அனுப்பிவைக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி -

tamilseconomy@gmail.com




| | |
|---|---|
| கத்தரிக்காய் | 150/= |
| உருளைக்கிழங்கு | 180/= |
| பச்சை மிளகாய் | 160/= |
| தக்காளி | 140/= |
| மரவள்ளிக்கிழங்கு | 120/= |
| கோவா | 200/= |
| கரட் | 300/= |
| வாழைக்காய் | 180/= |
| சின்ன வெங்காயம் | 350/= |
| பாகற்காய் | 250/= |
| வெண்டக்காய் | 80/= |
| பயற்றங்காய் | 120/= |
| பீற்றூட் | 120/= |
| முருங்கக்காய் | 600/= |
| தேங்காய் | 130/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 192/= |
| கனடா டொலர் - | 215/= |
| சீன யுவான் - | 39/= |
| யுரோ - | 318/= |
| ஜப்பான் யென் - | 2.0/= |
| சிங்கப்பூர்டொலர் - | 216/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 371/= |
| சுவிஸ் பிராங் - | 322/= |
| அமெரிக்க டொலர் - | 294/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 202/= |
| கனடா டொலர் - | 225/= |
| சீன யுவான் - | 42/= |
| யுரோ - | 331/= |
| ஜப்பான் யென் - | 2.0/= |
| சிங்கப்பூர் டொலர் | 226/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 385/= |
| சுவிஸ் பிராங் - | 338/= |
| அமெரிக்க டொலர் - | 303/= |

உந்த வள்ளைப் பாட்டு தொல்காபியக் காலத்திலையே இருந்திருக்குது எண்டதை “குன்றாச் சிறப்பின் கொற்றவள்ளை” எண்ட வரியளிலை இருந்து அறியலாம் எண்டுவார் எங்கட அப்பு .இப்ப மாதிரி எடுத்ததுக்கெல்லாம் குத்த இடிக்க வறுக்க எண்டு மில்லுக்கு ஓடுற மாதிரி அப்ப ஒருத்தரும் ஒடுறேல்லை . நாங்கள் தான் வீட்டிலை உள்ளாக்கள் ஆம்பிளை பொம்பிளை வேறுபாடு இல்லாமல் அரிசி மா தூள் எல்லாம் குத்துவம் இடிப்பம் வறுப்பம்.



# எங்கட ஆச்சி



- காரைக்கவி கந்தையா பத்மானந்தன் -

எங்கட அடுக்களைக்கு வெளிப்பக்கத்தில வடக்கால கொஞ்சம் உயரமா ஒரு கொட்டில் போட்டிருந்தது .

கூரை கிடுகாலை மேஞ்சு நிலத்துக்கு சீமெந்து போட்டிருந்தது . அதுக்குள்ளையும் கருக்குமட்டை கொக்கறை பன்னாடை காங்குமட்டை கொத்து விறகு ஒருபக்கத்தில அட்டாளையிலை தொங்கும் அதோட உரல் உலக்கை அம்மி ஆட்டுக்கல் எல்லாம் அங்கதான் இருக்கும் . புழுங்கல் நெல்லு பச்சை நெல்லு குத்திறது அரிசி மா மிளகாய்த்தூள் கோப்பித்தூள் உரலிலை இடிக்கிறது அரிசி மா வறுக்கிறது உளுந்து ஆட்டுக்கல்லிலை ஆட்டுறது எல்லாம் அந்தக் கொட்டிலிலைதான் நடக்கும்.

எங்கடை பெண்டுகள் உரலிலை என்னத்தையும் போட்டு உலக்கையாலை இடிக்கேக்கை ஊர்க்கதையளைப் பறைஞ்சு பறைஞ்சுதான் இடிப்பினம் . எங்கடை வீட்டை ஆச்சியோடை சேந்து மா இடிக்க வாற செல்லம்மா அக்கை சில வேளை பாட்டுப்பாடிக்கொண்டுதான் மா இடிப்பா .

உப்பிடித்தான் செல்லம்மா அக்கை மாதிரி அந்தக்காலத்திலை எங்கடை பெண்டுகள் என்னத்தையும் இடிக்கேக்கை பாட்டுப்பாடித்தான் இடிப்பினம். உப்பிடிப் பாடுற பாட்டுக்களை வள்ளைப் பாட்டு எண்டுவினம்வள்ளை எண்டால் உலக்கை. அது என்னண்டால் உலக்கையால குத்தேக்கை களைப்பு வராமல் இருக்க வெண்டு அவை பெண்டுகள் பாடுறவை எண்ட அப்பு உந்த வள்ளைப் பாட்டை உறற்பாட்டு, உலக்கைப் பாட்டு, அம்மானை வள்ளை, பொற்சுண்ணம், வள்ளைக் கூத்து எண்டும் சொல்லறது எண்டுவார் .

உந்த வள்ளைப் பாட்டு தொல்காபியக் காலத்திலையே இருந்திருக்குது எண்டதை “குன்றாச் சிறப்பின் கொற்றவள்ளை” எண்ட வரியளிலை இருந்து அறியலாம் எண்டுவார் எங்கட அப்பு .இப்ப மாதிரி எடுத்ததுக்கெல்லாம் குத்த இடிக்க வறுக்க எண்டு மில்லுக்கு ஓடுற மாதிரி அப்ப ஒருத்தரும் ஒடுறேல்லை . நாங்கள் தான் வீட்டிலை உள்ளாக்கள் ஆம்பிளை பொம்பிளை வேறுபாடு இல்லாமல் அரிசி மா தூள் எல்லாம் குத்துவம் இடிப்பம் வறுப்பம். அதால செலவும் மிச்சம் உடம்புக்கும் நல்ல பயிற்சி மற்றது எல்லாச் சாமானும் நல்ல சுத்தம் சுகாதாரமுமாய் துப்பரவாய் இருக்கும் .

சங்க காலத்திலையும் எங்கட ஆக்கள் உரல் உலக்கை பாவிச்சு இருக்கிறாங்கள் எண்டு கன பாட்டுகளிலை இருக்குது எண்டு சொல்லுவா எங்கட ஆச்சி.

அப்ப இருந்த எங்கடை ஆக்கள் சிலர் நல்ல வசதி உள்ளவை எண்டதை உந்த உரலிலை உலக்கையாலை இடிக்கிற பாட்டுகளிலை எங்கடை புலவர்கள் சொல்லிப் பெரிய விசும்பு எல்லாம் விட்டு இருக்கினம் எண்டதையும் நாங்கள் அறிஞ்சு வைச்சிருக்க வேணும் எண்டுவா ஆச்சி.

உப்பிடித்தான் அப்பத்தே பெண்டுகள் முத்தின தினைக் கதிர்களை எடுத்து சந்தன மரத்தால செய்த உரலில போட்டு முத்து நிறைஞ்சு இருந்த யானைத் தந்தத்தால குத்தினவளவையாம் . அதமாதிரி அவளவை எங்கட பெண்டுகள் மூங்கில் நெல்லைப் பாறை உரலிலை போட்டு யானைத் தந்தத்தால் குத்தினவளவையாம்.உத மாதிரி குறப் பெண்டுகள் மலை நெல்லைப் பாறையிலை போட்டு யானைத் தந்தத்தால் குத்தினவளவையாம் எண்டும் பாட்டுகளிலை சொல்லிக் கிடக்குது எண்டுவா ஆச்சி .

உரலிலை இடிக்கிறது எண்டது நல்ல ஒரு பயிற்சி அதாலை அந்தக் காலத்திலை ஆக்கள் வாதை வருத்தம் ஒண்டும் இல்லாமல் நல்ல சுக தேகியளா இருந்தவை .ஆனா இப்ப எங்கட ஆக்கள் ஒருத்தருக்கும் உப்பிடி உலக்கை பிடிச்சு உரலிலை இடிக்க நேரமும் இல்லை கனபேர் இடிக்கிறதை மறந்தும் போட்டினம் . ஆகப் பகிடி என்னண்டால் இப்பத்தையான் பெடி பெட்டையள் கனபேருக்கு உரல் உலக்கை எண்டாலே என்னண்டு தெரியாது .

சில தாய் தேப்பன் என்ரை பிள்ளை யளுக்கு உது ஒண்டும் தெரியாது எண்டு விசும்பு விடேக்கை மூஞ்சையில குத்த வேணும் போல இருக்கும் எண்டுவா எங்கட அன்னம்மா குஞ்சாச்சி இப்பத்தே எங்கட ஆக்கள் என்னவும் குத்த வேணும் இடிக்க வேணும் எண்டால் ஒண்டில் குசினியிலை சுமிற்றிலை சுத்துவினம் இல்லாட்டில் மில்லுக்கு சுத்திச் சுத்தி ஒடுவினம் .

சிலர் உப்பிடி வீட்டிலை இடிக்கிறவை யை கஞ்சப் பிசினாறியள் எண்டு நொட்டை நோகரிகம் சொல்லுவினம் .உந்தக் கோதாரி பிடிச்ச உரல் உலக்கையை மறந்த பழக்கத்தாலை இண்டைக்கு கன பேருக்கு கண்ட கிண்ட வருத்தங்களும் வந்து குக்கிக் கொண்டும் கக்கிக் கொண்டும் இருக்கினம் எண்டுதான் சொல்ல வேணும்

# வரி விளம்பரம் classified advertisement




## வேலைவாய்ப்பு

தமிழ்த் தட்டச்சுத் தெரிந்த பக்க வடிவமைப்பாளருக்கான முழுநேரப் பகுதிநேர (இரவு) வேலைவாய்ப்பு உள்ளது. அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு - 0777277009

--------------------------------------

எழுதுமட்டுவாழ் பகுதியில் அமைந்துள்ள இயற்கை விவசாயப் பண்ணையில் தங்கி நின்று வேலைசெய்யக்கூடிய ஆண் தோட்டக்காரர் தேவை. உணவு, தங்குமிட வசதி செய்துதரப்படும்.

தொடர்புகளுக்கு - 0766482303

--------------------------------------

நாவற்குழியில் உள்ள விருந்தினர் விடுதி (Hotel) ஒன்றில் அறை பராமரிப்பாளர், சுத்திகரிப்புத் தொழிலாளி, உணவு பரிமாறுபவர் ஆகிய வேலைவாய்ப்புகள் உள்ளன. சம்பளத்திற்கு மேலதிகமாக ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777276818

--------------------------------------

யாழ் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் அமையவுள்ள உள்ளூர் உற்பத்திப் பொருள் விற்பனை அங்காடியில் விற்பனை உதவியாளர் வேலைவாய்ப்பு உள்ளது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0767403814

--------------------------------------

நாட்டின் பல பாகங்களில் வியாபாரத்தினைக் கொண்டுள்ள நிறுவனத்தின் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அலுவலகத்திற்குக் கணக்கு உதவியாளர் (Accounts Assistant) வேலைவாய்ப்பு உள்ளது. கணக்குவழக்குப் பராமரித்தல், வங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ளல் என்பன வேலைகளாக இருக்கும். அனுபவம் வாய்ந்த கணக்காளரின் கீழ் வேலைசெய்யும் வாய்ப்பு.

தொடர்புகளுக்கு 0777299386

--------------------------------------

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள **Software and Web Developement** நிறுவனத்திற்குச் சகல நிலைகளுக்குமான ஆள் சேர்ப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பயிற்சிபெற விரும்புவர்கள் உங்களின் சுயவிபரக் கோவையினை **onlinew4u@gmail.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (மின்னஞ்சலின் **subject** இல் **Software and Web Developement** குறிப்பிட்டு அனுப்பவும்)

--------------------------------------

விளம்பரம் சேகரிப்பாளர் **(Advertisement Collector)** முழுநேர, பகுதிநேர வேலைவாய்ப்பு - அடிப்படைச் சம்பளம் மற்றும் மேலதிகக் கொடுப்பனவு வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777277009

--------------------------------------

வாகனச் சாரதிக்கான வேலைவாய்ப்பு. **light vehicle driving license - B, C, G1** சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0770684905

--------------------------------------

## SALE விற்பனைக்கு

தரமான சுவையான குறிஞ்சிக் கோப்பி விற்பனைக்கு உண்டு. மலையகத்தில் இருந்து பெறப்பட்ட தரமான கோப்பியில் இருந்து சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட யாழ்ப்பாணச் சுவையுடனான கோப்பிகள் 100g Tinகளில் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு 0764438620

--------------------------------------

கறுவாக் கன்றுகள் விற்பனைக்கு உள்ளன. யாழ்ப்பாணத்துச் சீதோஸ்ணத்தில் வளரக்கூடிய கறுவாக் கன்றுகள். 2 கன்றுகள் அடங்கிய பை 150 ரூபாய் மட்டுமே.

தொடர்புகளுக்கு - 0766482303

--------------------------------------

வீட்டுத் தோட்ட விதைகள் விற்பனைக்கு உள்ளன - 0763352782 - கிளிநொச்சி

--------------------------------------

சுத்தமாகத் தயாரிக்கப்பட்ட நவதானியங்கள் அடங்கிய சத்துமா விற்பனைக்கு உண்டு. - 0760225528 மன்னார்.

--------------------------------------

புரோட்டின் நிறைந்த கச்சான் லட்டுக்களைப் பெற்றுக்கொள்வதற்கு - 0777 421896 கிளிநொச்சி.

--------------------------------------

அனைத்து வகையான வடகங்கள் மற்றும் மூலிகைப் பொருட்களைப் பெற்றுக் கொள்ள - 0779151820 கிளிநொச்சி.

--------------------------------------

பாரம்பரிய முறையில் தயார் செய்யப்பட்ட சுத்தமான தேங்காய் எண்ணெயைப் பெற்றுக் கொள்வதற்கு நீங்கள் அழைக்க வேண்டிய இலக்கம். - 0766982219 யாழ்ப்பாணம்.

--------------------------------------

மூலிகைகளால் தயாரிக்கப்படும் சுத்திகரிப்புப் பொருட்கள் மற்றும் சவர்க்காரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு - 0773972309 மன்னார்.

--------------------------------------

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படும் பத்திக் துணிகளையும் ஆடைகளையும் கொள்வனவு செய்வதற்குத் தொடர்புகொள்ளவும் - 0776126448

வாரஇதழ்...

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY

| கறுப்பு வெள்ளை விளம்பரம் | |
|---|---|
| வரி விளம்பரம் | இலவசம் |
| பெட்டி விளம்பரம் | 600.00 |
| ¼ பக்கம் | 3,500.00 |
| ½ பக்கம் | 6,000.00 |
| முழுபக்கம் | 10,000.00 |

| வர்ண விளம்பரம் | |
|---|---|
| பெட்டி விளம்பரம் | 900.00 |
| ¼ பக்கம் | 5,000.00 |
| ½ பக்கம் | 9,000.00 |
| முழுபக்கம் | 16,000.00 |

தமிழர் பொருண்மியம் வாரஇதழில் உங்கள் விளம்பரங்களை வெளியிட

0777 27 69 49 | 076 443 8622

#68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

தமிழர் பொருணமியம் வாரமலர் TAMILS ECONOMY



ஞாயிற்றுக்கிழமை
14.04.2024

# கச்சதீவுக்கு பதிலாக இந்தியா பெற்ற Wadge Bank



நிஷாந்தி பிரபாகரன்




காங்கிரஸ் ஆட்சியின்போது கச்சத்தீவை இலங்கைக்கு தந்துவிட்டதாக பா.ஜ.க. குற்றம்சாட்டிவரும் நிலையில், இந்தியா, நல்லெண்ண அடிப்படையில் ஒப்பந்தம் செய்து கச்சத்தீவுக்குப்பதிலாக- முக்கியத்துவம் வாய்ந்த "நுயனபந டயயெ" பகுதியை பெற்றதாக காங்கிரஸ் கூறியிருக்கிறது.

⇨ இந்தியா எந்த சூழ்நிலையில் கச்சத்தீவின் மீதான உரிமையை கைவிட்டது?

⇨ அதற்கு ஈடாக என்ன கிடைத்தது?

⇨ இந்த Wadge bank பகுதி எங்கே இருக்கிறது? இதன் முக்கியத்துவம் என்ன?

⇨ கச்சத்தீவுக்கு பதிலாக இந்தியா பெற்ற நுயனபந டியயெ 6,500ச.கி.மீ நிலப்பகுதியில் என்ன இருக்கிறது?

⇨ Wadge Bank கடல் பகுதி : கடல் வாழ் உயிரினங்கள் நிறைந்தவை ஆனால் பெட்ரோலியம் இருக்கிறதா?

Wadge Bank அல்லது வெட்ஜ் பள்ளத்தாக்கு கன்னியாகுமரிக்கு (Cape Comorin கேப் கொமோரின்) தெற்கே 50 கிலோ மீட்டருக்கு அப்பால் கடலடியில் உள்ள கடற்பகுதி வளம் நிறைந்த ஆழ்கடல் மீன்பிடித் தளமாகும். கன்னியாகுமரி கடற்கரையிலிருந்து கிட்டத்தட்ட 80 கிலோமீட்டர் (50 மைல்) கடல் நோக்கிய ஒரு கண்டத்திட்டின் முனைப் பகுதி ஆகும். இந்தப் பகுதியில் கடலின் ஆழம் 200 மீட்டர் அளவுக்கு இருக்கும். இது 76$^{0}$.30' E முதல் 78$^{0}$.00 E தீர்க்கரேகை மற்றும் 7$^{0}$.00 N முதல் 8$^{0}$ 20' N அட்சரேகை வரையில் 4,000-சதுர மைல் (சுமார் 6,500 சகிமீ) பரப்பளவைக் கொண்டதாக இந்திய மீன்வளக் கணக்கெடுப்பால் அடையாளம் காணப்பட்டுள்ளது. இது உலகின் வளமான மீன்பிடி தளங்களில் ஒன்றாகும், மேலும் கச்சத்தீவை விட கடலின் மிகவும் மூலோபாய பகுதியில் உள்ளது.

இந்தப் பகுதியில் கடல் பல்லுயிர் வளம் அதிகம் என்பதால் மீன் வளமும் அதிகம். இந்த கடற் பகுதியில் வெப்ப நிலை மிதமானதாக இருந்தாலும், உப்புத் தன்மை அதிகமாக இருக்கும். இந்தப் பகுதி மீன்கள் இனப் பெருக்கம் செய்ய உகந்த பகுதியாக கருதப்படுகிறது. மே மாதம் முதல் அக்டோபர் வரை மீன் பிடிக்க மிகச் சிறந்த காலமாகக் கருதப்படுகிறது. இந்தப் பகுதியில் சுமார் 425 வகையான மீன்கள் காணப்படு கின்றன.

இந்தியாவின் மிகப்பெரிய மீன்வள வளமாகக் கருதப்படும் Wadge Bank பகுதியிலிருந்து வருடத்திற்கு 65,000 மெட்ரிக் தொன்கள் அளவுக்கு மீன்களைப் பிடிக்க முடியும்.

கன்னியாகுமரிக்கு அருகில் உள்ள இந்தப் பகுதி தமிழகம் மற்றும் கேரளாவைச் சேர்ந்த மீனவர்களுக்கு நான்கு தசாப்தங் களுக்கும் மேலாக முக்கியத்துவம் வாய்ந்தது. இந்தப் பகுதியில் மீன் பிடிக்க கன்னியாகுமரி மாவட்டத்தின் குளச்சல், சின்ன முட்டம் துறைமுகத்திலிருந்து மீன் பிடிப் படகுகள் செல்கின்றன. கேரளாவின் விழிஞ்சம் பகுதியிலிருந்தும் படகுகள் வருகின்றன.

▪ 1974ல் இந்தியா உண்மையில் கச்சத்தீவை இலங்கைக்கு "விட்டுக் கொடுத்ததா"?

இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, 1976ல், இந்தியா இலங்கையுடன் இரண்டாவது ஒப்பந்தத்தில் கையெழுத் திட்டபோது என்ன நடந்தது?

## கச்சத்தீவு

கச்சத்தீவு இலங்கையின் கடல் எல்லைக் கோட்டிற்குள் கடலில் உள்ள 285 ஏக்கர் நிலப்பரப்பு ஆகும், இது இந்தியக் கடற்கரையிலிருந்து தமிழ்நாட்டின் ராமேஸ்வரத்திற்கு வடகிழக்கே 33 கிமீ தொலைவிலும், இலங்கையின் டெல்ஃப்ட் தீவின் தென்மேற்கிலும் அமைந்துள்ளது. சில அதிகாரப்பூர்வ அறிக்கைகளின்படி, 14 ஆம் நூற்றாண்டின் எரிமலை வெடிப்பைத் தொடர்ந்து உருவாக்கப்பட்ட சிறிய, தரிசு தீவு, 1.6 கிமீ நீளம் மற்றும் அதன் அகல மான இடத்தில் வெறும் 300 மீட்டர் அகலம் கொண்டது.


ஆங்கிலேயர் ஆட்சியின் போது சென்னை மாகாணத்தில் ராமநாதபுரத்தில் 1795 முதல் 1803 வரை ஜமீன்தாரியாக இருந்த ராமநாதபுரம் ராஜாவின் கட்டுப்பாட்டில் தீவு இருந்தது. தீவில் உள்ள 120 ஆண்டுகள் பழமையான புனித அந்தோணியார் தேவாலயம் ஆண்டு விழாவிற்கு இந்தியா மற்றும் இலங்கையில் இருந்து பக்தர்கள் பங்கேற்பர்.

இந்தியாவும் இலங்கையும் குறைந்தது 1921 முதல் கச்சத்தீவை உரிமை கொண்டாடி வந்தன. ராமநாதபுரம் அரசின் தீவின் உரிமையை மேற்கோள் காட்டி பிரிட்டிஷ் இந்தியக் குழு இதை எதிர்த்துப் போராடியது. இந்த சர்ச்சைக்கு தீர்வு காண முடியவில்லை, சுதந்திரத்திற்குப் பிறகும் அது தொடர்ந்தது.

1970 களில் இந்தியாவுக்கும் இலங் கைக்கும் இடையிலான கடல் பகுதியில் எல்லையை வகுக்கும் வகையில் இரு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன. பிராந்திய எல்லைகள் மீதான போட்டி உரிமை கோரல்களைத் தீர்ப்பதில் இருந்தது, இது கச்சத்தீவை இலங்கைக்கும் மற்றும் வளங்கள் நிறைந்த வாட்ஜ் பேங்கை இந்தியாவுக்கும் வழங்கும் ஒப்பந்தங்களுக்கு வழிவகுத்தது.

● முதலாவது ஒப்பந்தம் 1974ல் கையெழுத்தானது. இந்த ஒப்பந்தத்தின்படி, பாக் நீரிணை பகுதியில் எல்லை வகுக்கப்பட்டது. இதன்படியே கச்சத்தீவு இலங்கை பகுதியைச் சேர்ந்தது என முடிவெடுக்கப்பட்டது.

1974 ஆம் ஆண்டு, இந்திரா பிரதமராக இருந்தபோது, இரு அரசாங்கங்களும், ஜூன் 26 அன்று கொழும்பிலும், ஜூன் 28 ஆம் தேதி புது டில்லியிலும் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. இதன்




மூலம்கச்சத்தீவு இலங்கைக்குச் சென்றது, இந்திய மீனவர்கள் மற்றும் பக்தர்கள் தொடர்ந்து கச்சத்தீவுக்குச் செல்வதற்கான அணுகலை அனுபவிப்பார்கள், மேலும் இந்த நோக்கங்களுக்காக இலங்கை பயண ஆவணங்கள் அல்லது விசாவைப் பெற வேண்டிய அவசியமில்லை" என்று ஒப்பந்தம் கூறுகிறது.

ஒப்பந்தத்தில் இந்திய மீனவர்களின் மீன்பிடி உரிமைகள் பற்றி குறிப்பிடப் படவில்லை. ஆனால் இந்திய மீனவர்கள் கச்சத்தீவில் "ஓய்வெடுத்துக் கொள்ளவும், வலைகளை உலர்த்துதல் போன்ற பணிகளைச் செய்யவும் மற்றும் வருடாந்திர புனித அந்தோணியார் திருவிழாவில் கலந்துக் கொள்ளவும்," அனுமதி வழுங்கப்பட்டது.

- இரண்டாவது ஒப்பந்தம் மன்னார் வளைகுடா பகுதியில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான எல்லையை வரையறுத்தது. இலங்கையுடன் கையெழுத்திட்ட இரண்டு ஒப்பந்தங்களில் இரண்டாவதாக Wadge Bank பகுதி இந்தியாவுக்கு சென்றது,

மார்ச் 23, 1976 இல், இந்தியாவும் இலங்கையும் மன்னார் வளைகுடா மற்றும் வங்காள விரிகுடாவில் கடல் எல்லை தொடர்பான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன, இதன் ஒரு பகுதியாக றுயனபந டயமெ இந்தியா மற்றும் இந்தியாவிற்கும் பிரத்யேக பொருளாதார மண்டலத்திற்குள் பகுதி மற்றும் அதன் வளங்கள் மீது இறை யாண்மை உரிமைகளை வழுங்குகிறது.

ஐக்கிய நாடுகள் சபையுடன் பகிர்ந்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையுடன் இணைக்கப்பட்ட Wadge Bank ன் பொதுவான விளக்கத்தில், Wadge Bank "outside the territorial waters of India" என்று விவரிக்கப்பட்டுள்ளது. இது இந்தியாவின் கடல் எல்லை பகுதிக்கு அப்பால் இருந்தாலும், அதன் மீதான உரிமையை இந்தியா இலங்கை ஆகிய இரு நாடுகளும் உறுதிசெய்துள்ளன.

ஒப்பந்தத்தின்படி, இலங்கை மீன்பிடி படகுகள் மற்றும் பணியாளர்கள் றுயனபந டயமெ கரையில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதிக்கப்படவில்லை. றுயனபந டயமெ பகுதியில் உள்ள வளங்களை இந்திய மீனவர்கள் பயன்படுத்த ஒப்பந்தம் அனுமதித்தது.

இந்த ஒப்பந்தத்தில் இந்தியாவின் வெளியுறவுத்துறைச் செயலர் கேவல் சிங்கும் இலங்கையின் வெளியுறவுத் துறை செயலர் டபிள்யு.டி.ஜெயசிங்கவும் கையெழுத்திட்டனர். இதற்குப் (March 26.1976 ) பிறகு கேவல் சிங், டபிள்யு டி ஜெயசிங்கவுக்கு ஒரு கடிதத்தை எழுதினார். அந்தக் கடிதத்தில் வாட்ஜ் பேங்க் பகுதி பற்றி விரிவாகக் குறிப்பிட்டார்.

"Wadge Bankல் மீன் பிடிப்பது தொடர்பாக இரு அரசுகளுக்கும் இடையில் பின்வரும் புரிந்துணர்வு எட்டப்பட்டிருக்கிறது.

1. கன்னியாகுமரிக்கு அருகில் உள்ள வாட்ஜ் பேங்க், இந்தியாவின் பிரத்யேக பொருளாதார மண்டலத்தைச் சேர்ந்தது. அந்தப் பகுதியின் மீதும் அதன் வளங்கள் மீதும் இந்தியாவுக்கு முழு இறையாண்மை உண்டு.

2. இலங்கையைச் சேர்ந்த மீன்பிடி படகுகளோ, மீனவர்களோ வாட்ஜ் பேங்க் பகுதியில் மீன் பிடிக்க மாட்டார்கள். ஆனால், ஒரு நல்லெண்ண நடவடிக்கையாக மூன்று ஆண்டுகளுக்கு இந்தியா உரிமம்வழுங்கும் படகுகள் மட்டும் அங்கே மீன் பிடிக்கலாம். இந்த காலகட்டத்திற்குப் பிறகு றுயனபந டயமெ பகுதியில் இலங்கை மீன்பிடிப் படகுகள் மீன் பிடிக்கக்கூடாது.

3. இதற்காக இந்தியா விதிக்கும் கட்டணத்தையும் நிபந்தனைகளையும் இலங்கை மீன்பிடிப் படகுகள் ஏற்க வேண்டும்.

4. Wadge Bank பகுதியில் பெட்ரோலியமோ, பிற தனிமங்களோ கிடைக்கிறதா என இந்தியா ஆராய நினைத்தால், அது பற்றி இலங்கைக்குத் தெரிவிக்கப்படும். இந்தியா சொல்லும் திகதியில் இலங்கை படகுகள் வருவது நிறுத்தப்பட வேண்டும்.

5. Wadge Bank பகுதியில் இலங்கை யின் படகுகள் மீன் பிடிப்பது தடுக்கப்படுவதால், புதிதாக மீன்பிடி மண்டலங்களை உருவாக்க இந்தியா இலங்கைக்கு உதவிசெய்யும்" என அந்தக் கடிதத்தில் கூறினார். இதனை ஏற்பதாக டபிள்யு. டி. ஜெயசிங்கே பதில் கடிதம் ஒன்றை எழுதினார். இந்த ஒப்பந்தத்தின்படியே வாட்ஜ் பேங்க் பகுதி இந்தியாவுக்குக் கிடைத்தது.

1970 களில் அன்றைய அரசாங்கம் கொழும்பு மற்றும் டில்லி இரு நாடுகளுக்கும் இடையிலான மூலோபாய இருதரப்பு உறவுகளின் முழு வரம்பையும்எடுத்துக்கொண்டதாக இரு தரப்பினரும் "சிலவற்றை வென்றனர்" மற்றும் "சிலவற்றை இழுந்தனர்". "நல்லநம்பிக்கையுடன் "அந்த காலத்தின் உண்மைகளின் அடிப்படையில் இது கொடுக்கல் வாங்கல். கடல் எல்லையைத் தீர்ப்பதே நோக்கமாக இருந்தது" என்று டில்லியில் பணியாற்றிய முன்னாள் இலங்கை இராஜதந்திரி ஒருவர் கூறினார்.

எவ்வாறாயினும், "இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளின்படி மற்றும் நல்லெண்ணத்தின் சைகையாக", இந்தியாவால் உரிமம் பெற்ற இலங்கை படகுகள் Wadge Bank ல் "இந்தியா தனது பிரத்யேக பொருளாதார மண்டலத்தை நிறுவிய நாளிலிருந்து மூன்று ஆண்டுக ளுக்கு மீன்பிடிக்கலாம்" என்று இந்தியா ஒப்புக்கொண்டது". ஆனால் ஆறு இலங்கை மீன்பிடி கப்பல்களுக்கு மேல் அனுமதிக் கப்படவில்லை, மேலும் Wadge Bank ல் அவற்றின் மீன்பிடிப்பு எந்த வருடத்திலும் 2,000 டன்களுக்கு மேல் இருக்கக்கூடாது.

மூன்று வருட காலப்பகுதியில் இந்தியா " Wadge Bank கை பெட்ரோலியம் மற்றும் பிற கனிம வளங்களுக்காக ஆய்வு செய்ய முடிவு செய்தால்", இலங்கை படகுகள் "இந்த மண்டலங்களில் மீன்பிடி நடவடிக் கையை நிறுத்தும்...". இது இந்த மண்டலங்களில் ஆய்வு தொடங்கும் தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும்" என்றும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

- Wadge Bank பெட்ரோலியம் உள்ளதா?

Wadge Bank பகுதி மீன் மற்றும் பல்லுயிர் வளத்திற்காக அறியப்பட்ட பகுதியாக இருந்தாலும் இந்தப் பகுதியில் பெட்ரோலியம் கிடைக்கும் சாத்தியமும் இருப்பதாக இந்தியா கருதுகிறது.

2023 இன் பிற்பகுதியில், பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் (MOPNG) ஹைட்ரோகார்பன் ஆய்வு மற்றும் உரிமக் கொள்கையின் (HELP) கீழ் றுயனபந டயமெ பகுதியில் எண்ணெய் ஆய்வுக்கான நோட்டீஸ் ஒன்றை வெளியிட்டது. அந்த நோட்டீஸில், வாட்ஜ் பேங்க் பகுதியில் அடையாளம் காணப் பட்டுள்ள மூன்று இடங்களில் பெட்ரோலியம் கிடைக்க வாய்ப்புள்ளதா என ஆராய ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம் எனக் கூறியது.

NIO கன்னியாகுமரியில் உள்ள மீனவ சமூகங்களுக்கு அப்பகுதியின் முக்கியத் துவத்தை எடுத்துரைத்து, கன்னியாகுமரி மற்றும் கேரளாவைச் சேர்ந்த மீனவர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். சுற்றுச்சூழல் ஆர்வலர்களும் இதற்குக் கண்டனம் தெரிவித்தனர்.

# உள் மோசடி : வளர்ந்து வரும் அச்சுறுத்தல்!

## Internal Fraud: Growing Threat Impact on Tax Collection and Compliance






AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

உள் மோசடி என்பது அனைத்து அளவிலான வணிகங்களையும் அழிக்கக்கூடிய ஒரு தீவிர பிரச்சனையாகும். ஒவ்வொரு ஆண்டும் உள் மோசடி வணிகங்களுக்கு டிரில்லியன் கணக்கான டாலர்கள் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. ஒரு நிறுவனத்தின் சொத்துக்கள் மற்றும் வளங்களில் நம்பிக்கை கொண்ட ஊழியர்களால் இந்த வகையான மோசடி செய்யப்படுகின்றது. குற்றவாளிகள் பேராசை, பழிவாங்கல் அல்லது அவர்களால் வாங்க முடியாத வாழ்க்கை முறையை ஆதரிக்கும் விருப்பத்தால் தூண்டப்படலாம்.

பல்வேறு வகையான உள் மோசடிகள் உள்ளன, ஆனால் மிகவும் பொதுவானவை பின்வருமாறு:

- ➪ அபகரிப்பு
- ➪ மோசடியான கொடுப்பனவுகள்
- ➪ தரவு மீறல்கள்
- ➪ சொத்துக்கள் மற்றும் வளங்களை தவறாகப் பயன்படுத்துதல்
- ➪ நிதி அறிக்கை மோசடி
- ➪ இலஞ்சம் மற்றும் ஊழல்
- ➪ கட்டண மோசடி, கொள்முதல் மோசடி மற்றும் பயண மோசடி
- ➪ சொத்துக்கள் மற்றும் தகவல் சுரண்டல்
- ➪ அபகரிப்பு

ஒரு நிறுவனத்தில் இருந்து ஒரு ஊழியர் பணம் அல்லது சொத்துக்களை திருடுவதனை இது குறிக்கின்றது. பண ரசீதுகளை அகற்றுதல், காசோலைகளை அனுமதி அற்ற முறையில் சுய தேவைக்கு எடுத்தல் அல்லது போலி விலைப்பட்டியல்களை உருவாக்குதல் போன்ற பல்வேறு வழிகளில் இதைச் செய்யலாம். மோசடித் திட்டங்கள் சிக்கலானதாக இருக்கலாம் மற்றும் பல ஆண்டுகளாக கண்டறியப்படாமல் இருக்கலாம்.

அபகரிப்பு, ஒரு பரவலான உள் மோசடி, தனிப்பட்ட இலாபத்திற்காக நிறுவனத்தின் நிதி அல்லது சொத்துக்களை மோசடியாகப் பயன்படுத்துவதை உள்ளடக்கியுள்ளது. சில பொதுவான மோசடித் திட்டங்கள் பின்வருமாறு:

- செக் டேம்பரிங்: மோசடி செய்பவர்கள் காசோலைத் தொகையை மாற்றலாம் அல்லது தங்கள் கணக்குகளுக்கு பணத்தைத் திருப்புவதற்காக போலி கையெழுத்துப் போடலாம்.
- ஸ்கிம்மிங் ரொக்க ரசீதுகள்: ரொக்கப் பரிவர்த்தனைகளைக் கையாளும் ஊழியர்கள், விற்பனையைப் பதிவு செய்வதற்கு முன், வருமானத்தில் ஒரு பகுதியைப் தமக்காக பாக்கெட்டில் வைத்துக் கொள்ளலாம்.
- கற்பனையான விற்பனையாளர் திட்டங்கள்: போலி விற்பனையாளர்கள் மற்றும் விலைப்பட்டியல்களை உருவாக்குவது, குற்றவாளிகள் சட்டப்பூர்வமான பணம் செலுத்துவதன் மூலம் பணத்தைப் பறிக்க அனுமதிக்கின்றது.
- ஊதிய மோசடி: ஊதியப் பதிவுகளை உயர்த்துவது அல்லது போலியான ஊழியர்களை உருவாக்குவது நிறுவனத்தின் நிதிகளைத் திருடுவதற்குப் பயன்படுத்தப் படலாம்.

### அபகரிப்பைத் தணித்தல்:

- கடமைகளைப் பிரித்தல்: ஒரு நபர் முழு செயல்முறையையும் கட்டுப்படுத்துவதைத் தடுக்க, பணத்தைக் கையாளுதல், காசோலை எழுதுதல் மற்றும் பதிவு செய்தல் தொடர்பான தனிப் பணிகள்.
- வழக்கமான நல்லிணக்கங்கள்: வங்கி அறிக்கைகள் மற்றும் நிதிப் பதிவேடுகளின் முரண்பாடுகளைக் கண்டறிய அடிக்கடி சமரசம் மற்றும் பரிசோதனை செய்து கொள்ளல்.
- வைப்பு கட்டுப்பாடுகள்: மொத்த வங்கி மற்றும் ஏனைய வைப்புகளுக்கு பாதுகாப்பான நடைமுறைகளை செயற்படுத்தவும், இதில் முன்னறிவிப்பின்றி திடீர் பண எண்ணிக்கை மற்றும் பாதுகாப்புடன் கூடிய கவச கார் சேவைகள் அடங்கும்.
- பின்னணி/ மறைமுக சோதனைகள்: பணியாளர்கள், குறிப்பாக முக்கியமான நிதித் தரவைக் கையாள்பவர்கள் மீது முழுமையான மறைமுக பின்னணிச் சோதனைகளை மேற்கொள்ளல்.

### • மோசடியான கொடுப்பனவுகள்

மோசடியான கொடுப்பனவுகளில் போலி விலைப்பட்டியல்களை உருவாக்குதல் அல்லது நிறுவனத்தின் கணக்குகளிலிருந்து நிதியைத் திருப்புவதற்காக காசோலைகளை சேதப்படுத்துதல் ஆகியவை அடங்கும். இந்த வகையான மோசடி எந்தத் துறையிலும் உள்ள ஊழியர்களால் செய்யப்படலாம், ஆனால் இது பொதுவாக செலுத்த வேண்டிய கணக்குகள் மற்றும் கொள்முதல் ஆகியவற்றில் காணப்படுகின்றது.

உதாரணம்:

- ஒரு நிறுவன ஊழியர் விலைப்பட்டியல் தொகையை உயர்த்த விற்பனையாளருடன் கூட்டுச் சேர்ந்தார். மோசடி விலைப்பட்டியலை அங்கீகரிப்பதற்காக விற்பனையாளரிடமிருந்து ஊழியர்

உண்மைக்குப் புறம்பாக மேலதிகமான பணத்தினைப் பெறுகிறார்.

### பணம் செலுத்தும் மோசடியை தடுக்கும் முறைமைகள்:

• விற்பனையாளர் மேலாண்மை: சரியான விடாமுயற்சி சோதனைகளுடன் வலுவான விற்பனையாளர் ஒப்புதல் செயல்முறையை செயற்படுத்தவும்.

• இரு-காரணி அங்கீகாரம்: பணம் செலுத்துவதற்கு, குறிப்பாக அதிக மதிப்புள்ள பரிவர்த்தனைகளுக்கு, இரு காரணி அங்கீகாரம் தேவை. (two-factor authentication).

• பர்ச்சேஸ் ஆர்டர் மேட்சிங்: பேமெண்ட்களைச் (Payments) செயலாக்குவதற்கு முன், இன்வாய்ஸ்கள் கொள்முதல் ஆர்டர்களுடன் பொருந்துவதை உறுதிசெய்யவும்.

• மோசடி கண்டறிதல் மென்பொருள்: கட்டண முறைகளை பகுப்பாய்வு செய்வதற்கும் சந்தேகத்திற்குரிய செயற்பாட்டைக் கொடியிடுவதற்கும் மென்பொருளைப் பயன்படுத்தவும்.

### • தரவு மீறல்கள்

தரவு மீறல்களில் நிறுவனத்தின் தரவுகளின் அங்கீகரிக்கப்படாத அணுகல் அல்லது திருடுதல் ஆகியவை அடங்கும். இந்தத் தரவில் வாடிக்கையாளர் தகவல், நிதித் தரவு அல்லது அறிவுசார் சொத்து ஆகியவை அடங்கும். தரவு மீறல்கள் வணிகங்களுக்கு மிகவும் விலை உயர்ந்ததாக இருக்கும்,

ஏனெனில் அவை அடையாளத் திருட்டு, நிதி இழப்பு மற்றும் நற்பெயருக்குச் சேதம் விளைவிக்கும். தரவு மீறல்கள் வாடிக்கையாளர் தரவு, நிதிப் பதிவுகள் மற்றும் அறிவுசார் சொத்து உள்ளிட்ட முக்கியமான நிறுவனத் தகவலை அம்பலப்படுத்துகின்றன. ஒரு அதிருப்தியுள்ள ஊழியர் வாடிக்கையாளர் தரவைத் திருடி ஒரு போட்டியாளருக்கு விற்கலாம், இது குறிப்பிடத்தக்க நிதி மற்றும் நற்பெயருக்கு சேதம் விளைவிக்கும்.

### உங்கள் தரவைப் பாதுகாத்தல்:

• அணுகல் கட்டுப்பாடுகள்: குறைந்தபட்ச சிறப்புரிமைக் கொள்கையின் அடிப்படையில் முக்கியமான தரவுகளுக்கான பணியாளர் அணுகலைக் கட்டுப்படுத்த கடுமையான அணுகல் கட்டுப்பாடுகளைச் செயற்படுத்தவும்.

• தரவு குறியாக்கம்: ஓய்வு மற்றும் போக்குவரத்தில் உள்ள முக்கியத் தரவை, மீறினால் பயன்படுத்த முடியாததாக மாற்றவும்.

• பணியாளர் பயிற்சி: கடவுச்சொல் சுகாதாரம் மற்றும் ஃபிஷிங் விழிப்புணர்வு உள்ளிட்ட தரவு பாதுகாப்பு சிறந்த நடைமுறைகள் குறித்து ஊழியர்களுக்கு தொடர்ந்து பயிற்சி அளிக்கவும்.

• சம்பவ/நிகழ்வு பதில் திட்டம்: தரவு மீறல்களை விரைவாக நிவர்த்தி செய்வதற்கும் சேதத்தைக் குறைப்பதற்கும் ஒரு விரிவான சம்பவ மறுமொழித் திட்டத்தை உருவாக்கவும்.

அதாவது நிகழ்வு பதில்த் திட்டங்கள் பாதுகாப்பு நிகழ்வுகளின் விளைவுகளை குறைக்க உதவுகின்றன. எனவே, செயற்பாட்டு, நிதி மற்றும் நற்பெயர் சேதத்தை கட்டுப்படுத்துகின்றன. இத்திட்டங்கள் மூலம் சம்பவத்தின் வரையறைகள், விரிவாக்கத் தேவைகள், பணியாளர்களின் பொறுப்புகள், பின்பற்ற வேண்டிய முக்கிய படிகள் மற்றும் ஒரு சம்பவம் நடந்தால் மக்கள் தொடர்பு கொள்ள வேண்டியவை ஆகியவற்றையும் அமைக்கக் கூடியதாக இருக்கும்.

### • சொத்துக்கள் மற்றும் வளங்களைத் தவறாகப் பயன்படுத்துதல்

சொத்துக்கள் மற்றும் வளங்களைத் தவறாகப் பயன்படுத்துவதில் பணம், சரக்குகள் அல்லது சேவைகளின் திருட்டு அடங்கும். மோசடியான விலைப்பட்டியல் அல்லது காசோலையை சேதப்படுத்துவதும் இதில் அடங்கும். விற்பனைக்கான பொருட்களுக்குப் பொறுப்பாக இருக்கும் ஸ்ட்ரோக் கீப்பர் தொழிலாளர்கள் அல்லது காசாளர்கள் போன்ற நிறுவனத்தின் சொத்துக்களை அணுகக்கூடிய ஊழியர்களால் இந்த வகையான மோசடி பெரும்பாலும் செய்யப்படுகின்றது.

சொத்துக்களை தவறாகப் பயன்படுத்துதல் என்பது நிறுவனத்தின் சொத்து, சரக்கு அல்லது சேவைகளின் அங்கீகரிக்கப்படாத பயன்பாடு அல்லது திருடுதலை உள்ளடக்கியது. ஒரு உதாரணத்தைக் கருத்தில் கொள்வோம்:

• ஒரு warehouse தொழிலாளி சரக்குகளின் ஒரு பகுதியை தனிப்பட்ட இலாபத்திற்காக அல்லது கறுப்பு சந்தையில் மறுவிற்பனைக்காக திருப்பி விடலாம்.

### சொத்துக்களைப் பாதுகாத்தல்:

• நேரடி தளக்கட்டுப்பாட்டு பாதுகாப்பு முறைமைகள்: சிசிடிவி(CCTV) கேமராக்கள், அணுகல் கட்டுப்பாட்டு அமைப்புகள் மற்றும் சரக்கு மேலாண்மை அமைப்புகள் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை உடல் சொத்துக்களைக் கண்காணிக்கவும் கட்டுப்படுத்தவும் செயற்படுத்தவும்.

• வழக்கமான சரக்குத் தணிக்கைகள்: முரண்பாடுகளைக் கண்டறிய மற்றும் சாத்தியமான திருட்டுகளை அடையாளம் காண வழக்கமான சரக்கு கணக்கெடுக்கும் தணிக்கைகளை நடத்தவும்.

• சொத்து கண்காணிப்பு அமைப்புகள்: நிறுவனத்தின் சொத்தின் இருப்பிடம் மற்றும் பயன்பாட்டைக் கண்காணிக்க சொத்து கண்காணிப்பு அமைப்புகளை செயல்படுத்தவும்.

### • நிதி அறிக்கை மோசடி

• நிதி அறிக்கைகளை உண்மைக்கு புறம்பாக மாற்றுதல்

நிதிநிலை அறிக்கைகளைத் தவறாக கையாளுதல் என்பது ஒரு தனிநபர் அல்லது நிறுவனத்திற்கு பயனளிக்கும் வகையில் நிதித் தரவை தவறாகக் குறிப்பிடுவதை உள்ளடக்குகின்றது. வருமானத்தை உயர்த்துவது, பொறுப்புகளை மறைப்பது அல்லது போலி சொத்துக்களை உருவாக்குவது போன்ற பல்வேறு வழிகளில் இதைச் செய்யலாம். நிதி அறிக்கை மோசடி ஒரு நிறுவனத்தின் பங்கு விலையில் பேரழிவு தரும் தாக்கத்தை ஏற்படுத்தலாம் மற்றும் திவால்நிலைக்கு/வங்குரோத்து நிலைக்கு வழிவகுக்கும்.

நிதிநிலை அறிக்கைகளை தவறாகக் கையாளுதல் என்பது முதலீட்டாளர்கள், கடனாளிகள் அல்லது கட்டுப்பாட்டாளர்களை தவறாக வழிநடத்த ஒரு நிறுவனத்தின் நிதி ஆரோக்கியத்தை தவறாக சித்தரிப்பதை உள்ளடக்குகின்றது. ஒரு நிறுவனம் வருவாய் புள்ளிவிவரங்களை உயர்த்தலாம், பொறுப்புகளை மறைக்கலாம் அல்லது போலியான சொத்துக்களை உருவாக்கலாம்.

### • நிதி ஒருமைப்பாட்டை உறுதி செய்தல்:

• வலுவான உட்கட்டுப்பாடுகள்: கடமைகளை பிரித்தல் மற்றும் வழக்கமான மதிப்பாய்வுகள் உட்பட நிதி அறிக்கையிடல் செயல்முறைகள் மீது வலுவான உட்கட்டுப்பாடுகளை நிறுவுதல்.

• வெளிப்புறத் தணிக்கைகள்: நிதிநிலை அறிக்கைகளை முழுமையாக மதிப்பாய்வு செய்ய சுயாதீன தணிக்கையாளர்களை ஈடுபடுத்துங்கள்.

• தகவல் தருவோர் பாதுகாப்பு: சந்தேகத்திற்குரிய கணக்கியல் முறைகேடுகளை பதிலடிக்கு பயப்படாமல் பணியாளர்கள் வசதியாக உணரும் கலாச்சாரத்தை உருவாக்கவும்.

### • இலஞ்சம் மற்றும் ஊழல்

இலஞ்சம் மற்றும் ஊழல் என்பது வணிக முடிவுகளை பாதிக்க இலஞ்சம் வழங்குவது அல்லது ஏற்றுக்கொள்வது ஆகியவை அடங்கும். இந்த வகையான மோசடி எந்த மட்டத்திலும் பணியாளர்களால் செய்யப்படலாம். ஆனால் இது பொதுவாக விற்பனை மற்றும் கொள்முதல் ஆகியவற்றில் காணப்படுகின்றது. இலஞ்சம் மற்றும் ஊழல் ஒரு நிறுவனத்தின் நற்பெயருக்கு தீங்கு விளைவிக்கும் மற்றும் சட்ட சிக்கல்களுக்கு வழிவகுக்கும்.

இலஞ்சம் மற்றும் ஊழல் என்பது வணிக முடிவுகளைப் பாதிக்க இலஞ்சம் வழங்குவது அல்லது ஏற்றுக்கொள்வது ஆகியவை அடங்கும். உதாரணம்:

தொடர்ச்சி 22ம் பக்கம் .......

# கடின உழைப்பு நேர்மையான முதலாளியை உருவாக்குகிறது

நேர்கண்டவர் - ஞா.கவினி

**இந்த பழ ரசத்தினை அருந்த வந்திருந்த சிலரிடம் பேச்சுக் கொடுத்த பொழுது, பயணக் அழைப்பில் வருகிற எங்களுக்கு , செந்தளிப்பான முகமும் ,நாகரிகமான பேச்சுமாக அமைதியோடு எங்கள் கண்களுக்கு முன்பாகவே மிக வேகமாகவும் அதே சமயம் அழகாகவும் இவர் தயாரித்து தரும் பழரசங்கள் மற்றும் பானங்கள் மிகவும் ஆரோக்கியமாகவும் அருமையாகவும் இருக்கிறது. உண்மையிலேயே களைத்து போய் வருகின்றவர்களுக்கு இந்த குளிரகம் ஒரு வரப்பிரசாதம் தான் என்கிறார்.**



தவராசா யோதீஸ்வரன்

யாழ்ப்பாணத்தின் வளங்களை மாத்திரம் அன்றி வலிகளையும் கூறும் பிரதேசம் தான் செம்மணிப் பகுதி , கண்டி வீதிக்கு அழகு சேர்க்கும் செம்மணி வளைவும், அதனோடு சேர்ந்த வயல்களும், நீர் தேக்கங்களும் அங்கே தங்கள் பொருளாதாரத்தை தக்க வைத்துக் கொள்ள வாழ்வியலோடு போராடும் சிறுகடல் மீனவர்களும் என்று அந்த இடம் எப்போதும் ஊரின் வனப்பையும் வாழ்வியலையும் பத்திரப்படுத்தும் இடமாக காட்சியளிக்கும். ஆரம்பிக்கப்பட்டிருந்தது,

அகோரமான வெயில் அடிக்கின்ற காலங்களிலும், மழைக்காலங்களிலும் மாறி மாறி கால நிலைக்கு உகந்தாற் போல் தனது சிறிய வியாபாரத்தினை தக்க வைத்துக் கொண்டிருந்தவர் தவராசா யோதீஸ்வரன் .

நாலு மர தண்டுகளின் மேல் பலகைகளை அடுக்கி தனது குளிர்பானத்தை விளம்பரப் படுத்திக் கொண்டிருந்தார்... நாட்கள் நகர நகர வீதியோரக்கடை சிறிய தகரக் கடையையாகவும், இன்னும் ஒரு வருடம் கழித்து அங்கே ஒரு அழகான நகரும் குளிர்பான கடையாகவும் உருவாகியிருந்தது. ஒருவரது தன்னம்பிக்கையும் கடின உழைப்பும் எத்தகைய நிலவரத்தினின்று மீள முடியும் என்பதற்கு ஜோதீஸ் ஒரு உதாரணமாக இருக்கிறார்.

அவரது கடும் உழைப்பிற்கு சாட்சியாக அந்த மருத மரத்தின் கீழ் இன்று மலேசியன் குளிரகம் நிமிர்ந்து நிற்கிறது.

காலமும் சூழ்நிலைகளும் எல்லா நேரமும் சிறு வியாபாரிகளுக்கு கரம் கொடுப்பது இல்லை,

அதனால் ஆரம்பிக்கப்படும் சிறு வியாபாரங்கள் குறிப்பிட்ட நாட்களிலேயே காணாமல் போவதும் உண்டு. ஆனால் மிகச் சிறிய முதலீட்டோடு ஆரம்பிக்கப்பட்ட இந்த குளிர்பான நிலையம் இன்று ஒரு நாளைக்கு நுாற்றுக்கு அதிகமான வாடிக்கையாளர்களால் நிரம்பி இருக்கிறது என்று சொன்னால் இந்த தொழில் முயற்சியாளரின் கடின உழைப்பும் தன்னம்பிக்கையும் விடாமுயற்சியுமே இதற்கு காரணமாகும்.

குடும்பத்தின் சூழ்நிலை கருதி சிறிய வயதிலேயே வியாபாரங்களிலும் , தொழில் முயற்சிகளிலும் ஈடுபட்டுக் கொண்டிருந்த தவராசா யோதீஸ்வரன் புலம்பெயர்ந்து மலேசியா நாட்டில் உள்ள ஒரு உணவு உற்பத்தி நிலையத்தில் பணியாற்றி வந்திருக்கிறார்,

குடும்ப பாரத்தை மனதில் நிறுத்தி வேற்று நாடொன்றில் பணிபுரிந்து கொண்டிருந்தாலும், தனது சொந்தத் தொழிலுக்கான கனவு எப்போதும் ஜோதிசை துரத்திக் கொண்டே இருந்திருக்கிறது .

அந்த கனவுதான் மலேசியா நாட்டிலிருந்து அவரை தாய்நாடு நோக்கி வரவழைத்திருக்கிறது என்கிறார் .

சிறுவயதில் இருந்தே குடும்பத்தின் சுமையை தனது தோளில் சுமந்து கொண்டிருந்தவரின் கனவுக்கு நமது நாட்டின் பொருளாதாரம் அப்போது அவ்வளவாக கை கொடுக்கவில்லை .

எல்லா பொருட்களும் அதிக விலைக்கு விற்றுக் கொண்டிருந்தபோது தன்னிடம் இருந்த சொற்ப பணத்தில் வீதியின் ஓரத்தில் தன்னம்பிக்கையை மாத்திரம் கைகளில் பிடித்தபடி ஒரு குளிர்பான கடையை ஆரம்பிக்கிறார்.

ஏற்கனவே உணவகங்களில் பணியாற்றி இருந்த அனுபவமும், ஏலவே இவரிடம் குடி கொண்டிருந்த விடாமுயற்சியும் சேர்ந்து அவரை உந்தி தள்ளிக் கொண்டே இருந்திருக்கிறது .

அவரது வயது பையன்கள் எல்லாம் வெவ்வேறு பொழுதுபோக்குகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்க ஜோதிஷின் மூளை துரு துருவென்று எப்போதும் வியாபாரத்தை சுற்றிக் கொண்டே இருந்திருக்கிறது .

எப்போது போனாலும் குளிர்பான

கடையில் அருமையான ஒரு குளிர்பானம் எல்லோருக்கும் காத்திருக்கும், நியாயமான விலையில் மிகச்சிறந்த குளிர்பானத்தை எல்லோருக்கும் வழங்கிக் கொண்டிருக்கும் இவருக்கு ஒரு சிறிய கடையை போடுவதற்கான ஆவல் எப்போதும் இருந்திருக்கிறது.

“நான் இந்த கடையை ஆரம்பித்தபோது பலர் ரோட்டு கடையில் அப்படி என்னத்தை சாதித்து விடப் போகிறான் என்று எள்ளி நகையாடினர். ஆனால் வீதியில் வியாபாரம் செய்வதை நான் எப்போதும் எனது கௌரவ குறைவாக நினைக்கவில்லை. எனக்கு தெரியும்,நான்எனது வாடிக்கையாளர்களுக்கு கொடுக்கும் மரியாதையும், தரமான உற்பத்தியும் எப்போதும் அவர்களை என்பால் ஈர்க்கும் என்பதில் நான் உறுதியாக இருந்தேன் “என்று அமைதியாக சிரிக்கிறார்.

யாழ்ப்பாணத்தின் மிகப்பெரிய குளிரகங்கள் எல்லாவற்றிலும் கிடைக்கும் குளிர்பானங்களில் கூட செம்மணியின் முகப்பு வீதியோரத்தில் இருக்கும் இந்த சிறிய மலேசியன் குளிரகத்தில் கிடைக்கும் சுவை இருப்பதில்லை என்கின்றனர் பலர். உண்மைதான், வீதியால் வரும் வாடிக்கையாளர்களின் களைப்பை மாத்திரம் அல்ல ஒருவரின் அந்த நேர பசியையும் ஆற்றிவிடும் வல்லமை இவரது உண்டு. யு9 வீதியால்செம்மணி வளைவை கடக்கும் பலரில்னர் இவர் காலை வேலையின் சாலை பரபரப்பை நுர்ந்தபடி தனது குளிரகத்தை ஆரம்பிக்கும் இவரை, இந்த தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உங்களுக்கு இருக்கிறதா? என்று வினாவினோம்.

இந்த இடத்தில் கடையினை விருத்தி செய்யும் எண்ணம் எனக்கு இல்லை. ஆனால் இன்னும் இரண்டு வருடங்களில் ஒரு நிலையான இடத்தில் ஒரு குளிரகத்தை நிறுவ வேண்டும் என்றும் அங்கே பலருக்கு வேலை வாய்ப்பினை வழங்க வேண்டும் என்றும் விரும்புகிறேன். அத்தோடு எனது குளிரகத்தில் செயற்கை கலர்களினால் ஆன பானங்களை விடுத்து இயற்கையாகபெறப்பட்ட பழங்களின் பழரசத்தை கொடுக்கும் எண்ணம் இருக்கிறது.

தற்போதும் நான் வாடிக்கையாளர்களுக்கு கொடுக்கும் இந்த பழ ரசத்தில் ரசாயனங்கள் கலப்பதை முடிந்தவரை தவிர்த்து வருகிறேன் .உடனடியாக மசித்து தயார் செய்யப்பட்ட பழத்தினாலேயே கலவைகளை உருவாக்குகிறேன். இயந்திரங்களால் கலக்கப்படும் பழங்களில் உள்ள விட்டமின்கள் மற்றும் ஏனைய ஊட்டச்சத்துக்கள் அழிந்து போகிறது அதனால் சுவையும் ஆரோக்கியமும் குறைகிறது. ஆனால் எனது பல கலவையில் அல்லது பழ ரசத்தில் முறையான விட்டமின்களும் ஆரோக்கியமும் சகலருக்கும் கிடைக்க வேண்டும் என்பதில்




ஆர்வமாக இருக்கிறேன் என்று மிகத் தெளிவாக பதிலளிக்கிறார்.

இந்த பழ ரசத்தினை அருந்த வந்திருந்த சிலரிடம் பேச்சுக் கொடுத்த பொழுது, பயணக்களைப்பில் வருகிற எங்களுக்கு , செந்தளிப்பான முகமும், நாகரிகமான பேச்சுமாக அமைதியோடு எங்கள் கண்களுக்கு முன்பாகவே மிக வேகமாகவும் அதே சமயம் அழகாகவும் இவர் தயாரித்து தரும் பழரசங்கள் மற்றும் பானங்கள் மிகவும் ஆரோக்கியமாகவும் அருமையாகவும் இருக்கிறது. உண்மையிலேயே களைத்து போய் வருகின்றவர்களுக்கு இந்த குளிரகம் ஒரு வரப்பிரசாதம் தான் என்கிறார்.

இதனை கேட்டுக் கொண்டிருந்த ஜோதீஸ் கொஞ்சமும் தற்பெருமை இல்லாமல் “நான் எனது தொழிலுக்கு நியாயமாக நடக்க வேண்டும் என்று நினைக்கிறேன், யாரையும் ஏய்த்து பிழைக்கும் எண்ணம் எனக்கு இல்லை.

முறையாக ஒரு தொழிலை கற்று நியாயமாகவும் நிதானமாகவும் அந்த தொழிலை நடத்தும் போது வாடிக்கையாளர்கள் எங்களை தேடி வருவார்கள். இந்த வீதியில் இருந்து கொண்டு நான் கற்றுக் கொண்டவை ஏராளம் என்கிறார்.

சரி உங்களுக்கு வெளிநாட்டு வாழ்க்கை முறை பற்றி தெரியும் .நீங்கள் ஏன் மீண்டும் வெளிநாடு செல்வதை பற்றி யோசிக்கவில்லை என்று கேட்டபோது?

சிறுவயதில் இருந்து எனக்கு எப்போதுமே மற்றவர்களுக்கு அடிமையாக வேலை செய்வதில் உடன்பாடு கிடையாது. நான் அங்கு வேலை செய்து கொண்டிருந்த நாட்களிலும் ,எப்போது எனது தேசத்துக்கு போவேன் ?அங்கே சொந்தமாக ஒரு தொழிலை செய்வேன் என்று ஏங்கிக் கொண்டே இருந்தேன்.

சொல்லப்போனால் வெளிநாட்டில் உழைக்கும் பணத்தை நான் எனது சொந்த நாட்டிலேயே உழைத்து விடுகிறேன். ஆனால் எல்லாவற்றிற்கும் சாட்டுப் போக்க சொல்லிக் கொண்டிருக்கும் எல்லோராலும் இதனை சாதித்து விட முடியாது. கடும் உழைப்பும் தன்னம்பிக்கையும் ஒரு நேர்மையான முதலாளியை உருவாக்குகிறது என்று முத்தாய்ப்பு வைத்துவிட்டு வந்து கொண்டிருக்கும் வாடிக்கையாளர்களை மிகவும் சுறுசுறுப்பாக வரவேற்று குளிர் பானத்தை வழங்கிக் கொண்டிருக்கிறார் மலேசியன் கூல்பார் உரிமையாளர் தவராசா யோதீஸ்வரன்.

**வீடுகட்டுவது நிலத்தில் நடுவே கட்டுவதில்லை. நிலத்தை அளந்து அதில் பின்புறமோ என்னவோ வாசல் எந்தப்பக்கம் அடுக்களை எந்தப்பக்கம். தெருவாசல் எந்தப்பக்கம். என்பதெல்லாம் கணிக்கும் முன்னாக கிணறு எங்கே வருகிறது என்பதையும் பார்ப்பார்கள். அந்த நிலத்தில் இவற்றைக் கருத்தில் கொண்டுதான் வீட்டுக்கான வேலை தொடங்கும்.**

# இடம்பட வீடெடேல்

## எங்கள் வாழ்வும் வளமும்



- தமிழ்க்கவி -

“இடம்பட வீடெடேல்” இது அவ்வை அன்று சொன்ன வாக்கியம். இதற்கு பல அர்த்தங்கள் கொள்ளலாம். இடம் சரியில்லாத இடத்தில் வீடெடுக்க கூடாது. இடம் வசதிகளை கொண்டிருக்க வேண்டும். வாடகைக்கு வீடெடுப்பதாக இருந்தாலும் இந்த வசதிகளைக் கவனிக்க வேண்டும். பாடசாலையின் தூரம், வைத்தியசாலையின் தூரம், கடைத்தெரு சந்தை, என்பனவற்றின் தூரம். இவையெல்லாம் கருத்தில் கொண்டுதான் வாடகைவீடும் கொள்ள வேண்டும்.

ஆனால் அவ்வையின் கருத்து அதிலில்லை. காரணம் அந்தக்காலத்தில் இதையெல்லாம் கொள்ளும் அளவுக்கு வாடகை குடியிருப்புகள் கிடையாது. அவ்வை தனக்குள்ள நிலத்தை கணித்து அதில் என்ன பங்கை வீட்டுக்கு ஒதுக்கலாம் என்றே கூறினார். வீடுகட்டும் நிலத்தில் கிணறு, மலசலகூடம், முற்றம்வெளிப்படலை உள்செல்லும் வாசல் சமையலறை புற மால் என பல வித கட்டுமானங்கள் வரும்.



எனவே ‘இடம் பட” வீடெடுத்தல் ஆகாது.

வீடு கட்டுவது நிலத்தில் நடுவே கட்டுவதில்லை. நிலத்தை அளந்து அதில் பின்புறமோ என்னவோ வாசல் எந்தப்பக்கம் அடுக்களை எந்தப்பக்கம். தெருவாசல் எந்தப்பக்கம். என்பதெல்லாம் கணிக்கும் முன்னாக கிணறு எங்கே வருகிறது என்பதையும் பார்ப்பார்கள். அந்த நிலத்தில் இவற்றைக் கருத்தில் கொண்டுதான் வீட்டுக்கான வேலை தொடங்கும்.

கிழக்கு வடக்கு தாழ்வான பூமி வீட்டுக்கு ஏற்றது. அதே சமயம் தெற்கு மேற்கு உயரமாகத்தான் இருந்தாக வேண்டும். கிழக்கு நோக்கி உருளுகிற நாம் தலையைக் குனிந்தால் என்ன நடக்கும். எனவே நாம் எமது தலைகளை நிமிர்த்துவது சிறப்பாகும். விட்டைக்கட்டும் போது மலசல கூடத்தை வீட்டுக்கு வெளியேதான் கட்டுவார்கள். எமது வாஸ்து சோதிட முறையில் எப்பவோ மலசல கூடங்களை வீட்டின் வெளியே அமைத்தாலும் அதற்கென்றான திசையை தென்புறமாக வரையறுத்தார்கள். கிணறு ஊற்றுக்கிணறுகள் வடக்கு வடகிழக்கில் அமையும். எனவே மலசலகூட நீர் எப்படியும் தாழ்வாக இருந்தால் அது வீடுகட்ட உதவாது. நிலத்தில் ஒரு சிறு குழி வெட்டி, வெட்டிய குழியை திரும்ப அதிலிருந்து எடுத்த மண்ணாலேயே மூட, மண் மீதமிருந்தால் அது குடியிருக்க தகாத நிலம். போட்டமண் மீதமிருப்பின் அது நல்ல பொலிவான நிலம் என பெரியோர் சொல்வர். நிலம் சமமாகவே தெரிகிறது. எப்படி பள்ளம் பார்ப்பது, என் ஏங்குவோர், ஒரு குடம் தண்ணீரை அந்த சமதளத்தில் ஊற்றினால் அது எந்த திசை நோக்கி ஓடுகிறதோ எது பள்ளம் என கொள்ளலாம். முக்கோணக் காணிகள், வடக்கே பாடசாலை அல்லது கோவில் உள்ள காணிகள் வசிப்பதற்கு ஏற்றதல்ல. அந்த நிலமோ நிலத்தில் தொழில் புரிபவரோ லாபமடைய முடியாது. கோவிலுக்கு தெற்கே உள்ள நிறுவகங்கள் வளர்வது மிகக் கடினம்.

இவையெல்லாம் வாஸ்து முறை என நீங்கள் அர்த்தப்படுத்த வெண்டாம். இவை பரிபூரணமான உண்மை. விஞ்ஞான உண்மை. பூமி கிழக்கு நொக்கித்தான் சுழல்கிறது என்றால் பூமி மேற்கே



கிணற்று ஊற்றில் கலக்க வாய்ப்பே யில்லை.

இன்றைய அமைப்பில் அந்த மலகூடங்கள்நமது குசினியை அடுத்து அமைகிறது. முற்காலத்தில் தமது வளவிற்குள் மலங்கழிப்பது தரித்திரம் என்பார்கள். அப்போது மலசல கூடங்கள் கிடையாது. மக்கள் தம்மைச் சுற்றியுள்ள பற்றைகள் மந்துக்காடுகளை நோக்கி சென்று மலங்கழித்தார்கள். பின்னர் பெரு நகரங்கள் வைத்தியசாலை போன்ற இடங்களில் வாளிக்கக்கூசுகள் இருந்தன. நீரடைப்பு மலசல கூடங்கள் வந்தபின் மக்கள் தமது நிலத்தில் மலசல கூடங்களை அமைத்தனர்.

காலப்போக்கில் இடம்பட வீடெடுப்பதால் கிணறு மலசலகூடம் எல்லாமே வீட்டிற்குள் வந்து விட்டிருக்கிறது. நமக்கு முற்றம் மிக அவசியம் அதிலே ஒரு மல்லிகைக் கொடி வளர்த்து அல்லது வேப்பமர நிழல் அமைத்து அந்த நிழலில் சாக்கு கட்டிலோ அல்லது கயிற்றுக்கட்டிலோ போட்டு படுத்திருப்பது எவ்வளவு ஆனந்தம் என்பதை அனுபவித்தவர்களே அறிவார்கள்.

கோங்கு, விளா, புளி, முருங்கை, முருக்கு, என்பன முற்றத்தில் மட்டுமல்ல வீட்டின் அருகிலும் நிற்றல் ஆகாது. முறையாக கூறினால் இவற்றைத்தழுவி வரும் காற்று சுவாசத்துக்கு நல்லதல்ல. இது சோதிட விதி. ஆனால் விஞ்ஞானம் என்ன சொல்கிறது. குறித்தமரங்கள் காற்றிலிருந்து பெருமளவு நைதரசனை அள்ளிக் கொள்கின்றன. தேவையோ இல்லையோ அவற்றை சிறு சிறு குருணிகளாக பட்டையிலும் வேரிலும் சேமித்து வைத்துக் கொள்கின்றன. அதனால் அவை மருத்துவ குணத்தையும் புளிப்பையும் கொண்டிருக்கும். அவற்றின் உடல் தழுவி வரும் காற்றில் குறைவான நைதரசனை பெற்றுக் கொள்வதால் தேகம் உழைதல் சோர்வு களைப்பு என்பனவும் துக்கமின்மையும் எம்மை ஆட்கொள்ளும். சினம் இதனால் ஏற்படும். அந்த சினமானது அயலவர்களுடன் எம்மை தள்ளி வைக்கும்.

எனவேதான் இந்த மரங்கள் முற்றத்திற்கு ஆகாது. முருங்கைநிழல் முற்றத்தில் சாய்ந்தால் வீட்டுக்கு ஆகாது என்பதை ஆய்வு செய்த போது ஒரு நூலில் பெற்ற விபரம்தான் அது.

பூக்கன்றுகளை விடுத்து நாம் நிறைய குரோட்டன் செடிகளை நட்டு இடத்தையும் நேரத்தையும் வீணடிக்கிறோம். வீட்டை பெரிதாக கட்டி மேலும் மேலும் விரித்து கட்ட நினைத்தால் அதை தென்திசைக்கோ மேற்குத் திசைக்கோ விரிவு படுத்தக்கூடாது. முடிந்தால் கிழக்கு வடக்கு திசைகளை விஸ்தரிக்கலாம்.

வீடுகட்டுவது சிலருக்கு மனநோய் போல தொற்றிக் கொண்டுள்ளது. ஒரு அறுபது வயது மனிதரும் அவர்மனைவியும் வீடுகட்டுகிறார்கள்.

ஏற்கெனவே அவர்களுடைய பிள்ளைகளுக்கு வீடுகட்டி நிலங்களையும் கொடுத்தாயிற்று. இப்போது ஒரு மாடிவீடு கட்டுகிறார்கள் அவர்களுடைய வளவை நிறைத்து கட்டப்படும் வீட்டில் வாழப் போவது யார் என்ற கேள்வி உள்ளதல்லவா. இவர்களுடைய காலம் போனால் அவருடைய சந்ததிக்கும் அது பெரிதுதான். சிலர் காணிநிலங்களாக கொள்வனவு செய்து வினைக்கெடுகிறார்கள். அவர்களிடம் அவர்கள் வசிப்பதற்கு தேவையானதற்கும் அதிகமாகவே நிலம் உண்டு. ஆனால் மேலும்மேலும் நிலங்களை லட்சக்கணக்கில் பணம் கொடுத்து வாங்கி விடுகிறார்கள்.

இது போதாமல் அரசாங்க நிலத்தை ஆக்கிரமித்தும் வீடு கட்டி வைக்கிறார்கள். அரங்க நிலமாயினும் இவர்கள் அதில் வேலி போட்டு மடக்கியதும் அங்கு ஏற்கெனவே வாழ்ந்த மக்களின் வாழ்வாதாரத்தை நசுக்கியோர் போடுகிறார்கள். அந்தப்பகுதி கால்நடைகளின் மேச்சற்றல் தரைவைகள் இவற்றின் குடிநீர், மக்களின் சுய தேவைகளுக்கான வழிகள் அனைத்தையும் அடைத்துள்ளனர். இவர்கள் தாம் கட்டியெழுப்பும் அந்த வீடுகளையும் இந்த நிலத்தையும் எத்தனை காலம் எம்முடையது என்பார்களோ. ஒரு மனிதரின் சராசரி வயது அறுபதுமுதல் எழுபதுதான். அந்த வயதிற்குள் எவ்வளவு வீடுகளை கட்டினாலும் எத்தனை காணிகளை வாங்குப்போட்டாலும் அந்த நிலம் உன்னைப்பாத்து நகைக்கிறது என்பதுதான் உண்மை.

இன்னும் சில வருடங்களே வாழப் போகிறோம் என்ற நினைப்பிருந்தால் நாம் ஒருபோதும் அடுத்தவர் நலனை தடுக்க மாட்டோம். காணியும் நிலமும் வீடும் நிற்கும் காலம்வரை நீ நிற்பாயா. ஆறம் வாய்ந்த சிந்தனையுடன் ஒவ்வொருவரும் தனது குடும்பத்திற்கு இது போதும் என வாழ்ந்தாலே வளமும் நலமும் பெருகும்.



# வேர்க்கடலைச் செய்கையில் அதிக இலாபம் பெறுவதற்கு..

**பெண்கள் நிலக்கடலையை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் எலும்புத்துளை நோய் வராமல் பாதுகாத்துக் கொள்ளலாம். நிலக்கடலையை தினமும் 30 கிராம் அளவுக்கு சாப்பிட்டு வந்தால் பித்தப்பை கல் உருவாவதைத் தடுக்க முடியும்**

க. அமுதன்

வேர்க்கடலை, கச்சான் என்று பொதுவாய் அழைக்கப்படும் நிலக்கடலை, மக்களால் விரும்பி உண்ணப்படும் கொட்டைகளைத் தரும் பருப்பு வகை தாவரமாகும். தென் அமெரிக்காவை பூர்வீகமாகக் கொண்ட இந்த தாவரம் இன்று உலக நாடுகள் அனைத்திலும், உண்ணும் உணவில் ஒரு முக்கியமான இடத்தை பிடித்துள்ளது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் தென் ஆற்காட்டில் இந்த பயிர் அதிகம் விளைவிக்கப்பட்டதால் அது கிழக்கு கடற்கரை வழியாய் பிலிப்பைன்ஸ் நாட்டில் இருந்து இந்தியா வந்ததாக கருதப்படுகிறது. இன்று உலக அளவில் வேர்க்கடலை உற்பத்தியில் முன்னனி நாடாக இந்தியா உள்ளது. ஏறத்தாழ எட்டு மில்லியன் ஹெக்டேர்களில் கடலை சாகுபடி செய்யப்படுகிறது.

முக்கியமாக ஆந்திரம், தமிழகம், குஜராத், கர்நாடகம், மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்களில் கடலை சாகுபடி அதிகமாக உள்ளது.

## எப்படி பயிரிடுவது?

இரகங்கள் : டி.எம்.வி 7, டி.எம்.வி 10, கோ.3, கோ.ஜி.என் 4, கோ.ஜி.என் 5, ஏ.எல்.ஆர் 3, வி.ஆர்.ஐ2, வி.ஆர்.ஐ3, வி.ஆர்.ஐ.ஜி.என் 5, வி.ஆர்.ஐ 6 ஆகிய இரகங்கள் சாகுபடிக்கு ஏற்றவை.

நிலக்கடலை விதைப்புக்குச் சிறந்த பருவம் ஜூன் - ஜூலை மற்றும் டிசம்பர் - ஜனவரி மாதங்களே ஆகும்.

மண் மணற்பாங்கான வண்டல், செம்மண் நிலங்கள் நிலக்கடலை சாகுபடிக்கு ஏற்றவை. நிலம் தயாரித்தல் கோடை காலத்தில் நிலத்தை நன்றாக குறுக்கு உழவு செய்து, அதிலுள்ள களைகளை நீக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் கோடை மழையில் மண்ணில் மழை நீர் சேமிக்கப்படுகிறது. அல்லது கோடை மழையில் சணப்பை போன்ற பயிர்களை விதைத்து பூக்கும் தருணத்தில் அதை மடக்கி உழுதும் நிலத்தைத் தயார் செய்து வைக்க வேண்டும்.

விதை அளவில் 15 சதவிகிதம் கூடுதலாக தேவைப்படும். விதைநேர்த்தி ஒரு கிலோ விதைக்கு சூடோமோனாஸ் 10 கிராம் அல்லது டிரைக்கோடெர்மா 4 கிராம் கொண்டு விதை நேர்த்தி செய்ய வேண்டும். இவ்வாறு செய்வதால் விதை முளைப்புத்திறன் அதிகரிக்கப்படுவதுடன் பூச்சி மற்றும் நோய் எதிர்ப்புத்திறன் அதிகரிக்கிறது.

விதை நேர்த்தி மிகவும் கவனமாக செய்ய வேண்டும். ஏனெனில் விதை நேர்த்தி செய்யும் போது விதை உறையில் பாதிப்பு ஏற்பட்டால் முளைப்புத்திறன் பாதிக்கப்படும். விதை நேர்த்தி செய்யாவிட்டால், ஏக்கருக்கு ரைசோபியம்



4 பாக்கெட்(800 கிராம்) மற்றும் பாஸ்போபாக்டீரியா 4 பாக்கெட் (800 கிராம்) உடன் 10 கிலோ தொழு உரம் மற்றும் 10 கிலோ மணலுடன் கலந்து விதைப்பதற்கு முன்னால் இட வேண்டும்.

இவ்வாறு செய்வதால் பருவமழை வந்தவுடன் விதைப்புக்கருவி கொண்டு விதைப்பதற்கு ஏதுவாக இருக்கும். செம்மண் நிலங்களைப் பொறுத்தவரையில் மேல்மண் இறுக்கம் கடலை மகசூலை மிகவும் பாதிக்கிறது. மேல் மண் இறுக்கத்தை நிவர்த்தி செய்ய எக்டருக்கு 2 டன் சுண்ணாம்பு மற்றும் 12.5 டன் தொழு உரம் அல்லது மக்கிய தென்னை நார்க்கழிவு கடைசி உழவின் போது இட வேண்டும்.

மேலும் அடிமண் கடின அடுக்கை உடைக்க 3 வருடத்திற்கு ஒருமுறை உளிக்கலப்பை கொண்டு உழ வேண்டும். விதையளவு எக்டருக்கு 125 கிலோ விதையினைப் பயன்படுத்தவேண்டும். பெரிய விதை கொண்ட இரகங்களுக்கு

## விதைத்தல்

நிலக்கடலைக்கு வரிசைக்கு வரிசை 30 செ.மீ, செடிக்கு செடி 10 செ.மீ இடைவெளியும் விட்டு விதைக்க வேண்டும். மானாவாரி செம்மண் மற்றும் செம்புரை நிலங்களில் விதைப்புக்கருவி கொண்டு விதைக்கும் போது விதையின் அளவு குறைவதுடன் மண்ணில் ஈரம் குறைவதற்குள் விதைத்து விடலாம். விதைக்கருவியின் மூலம் விதைப்பதால்





சரியான பயிர் இடைவெளியை கடைபிடிக்கலாம்.

இவ்வாறு செய்வதால் களை நிர்வாகம் செய்வதற்கு ஏதுவாகவும் மற்றும் பயிர் வளர்ச்சி சீராகவும் இருக்கும். நீர் நிர்வாகம் விதைக்கும் சமயம் ஈரப்பதம் உள்ளவாறு பார்த்துக்கொள்ள வேண்டும். பின்னர் உயிர்த் தண்ணீர் விதைத்த 4-5வது நாள் விட வேண்டும். மண்ணின் ஈரப்பதத்தைப் பொறுத்து வாரம் ஒரு முறை நீர் விடவேண்டும். உரங்கள் ரைசோபியம் மற்றும் பாஸ்போபாக்டீரியா உயிர் உரத்தினை ஏக்கருக்கு 4 பாக்கெட் வீதம் அடியுரமாக இடுவதால் தழைச்சத்து மற்றும் மணிச்சத்து நிலக்கடலைக்கு சீராகக் கிடைக்கும். ஜிப்சம் இடுதல் நிலக்கடலை உற்பத்தியில் பயிருக்கு ஜிப்சம் இடுவது மிக அவசியம்.

ஜிப்சத்தில் சுண்ணாம்புச் சத்தும், கந்தகச் சத்தும் அடங்கி உள்ளன. சுண்ணாம்புச்சத்து காய்கள் திரட்சியாகவும், அதிக எடை உடையதாகவும் உருவாக வழிசெய்கிறது. கந்தகச்சத்து நிலக்கடலையில் எண்ணெய்ச் சத்தை அதிகரிக்கிறது. ஒரு ஏக்கருக்கு 160 கிலோ ஜிப்சத்தை விதைத்த 40-45ம் நாள் இட்டு செடிகளைச் சுற்றி மண் அணைக்க வேண்டும்.

பாதுகாப்பு முறைகள் களை நிர்வாகம் நிலக்கடலையில் அதிக மகசூல் பெற களை கட்டுப்பாடு மிகவும் அவசியம். நிலத்தில் உள்ள பயிர்சத்து வீணாகாமல் தவிர்த்திடவும், களைகள் மூலம் மண், ஈரம் வீரயமாவதைத் தவிர்த்திடவும், பயிர்களுக்கு போதிய சூரிய ஒளி கிடைத்திடவும் மற்றும் பூச்சி நோய்கள் பரவாமல் தடுத்து அதிக விளைச்சல் பெறுவதற்கும் களை கட்டுப்பாடு மிகவும் அவசியமாகிறது. விதைத்த 45 நாட்களுக்குள் களைகளைக் கட்டுப்படுத்துவது அவசியம்.

## பயிர் பாதுகாப்பு

சிகப்புக் கம்பளிப் புழு சிகப்புக் கம்பளிப்புழுக்களை கட்டுப்படுத்த குவினால் பாஸ் 2.5 மி.லி, என்.பி.வி. நச்சுயிரி (300 புழுக்களை ஊறவைத்து பெறப்படும் நச்சுயிரிக்கரைசல்) மற்றும் 100 மி.லி ஒட்டும் திரவம் அல்லது ட்ரைட்டான் சேர்த்து 150 லிட்டர் தண்ணீரில் கலந்து மாலை நேரங்களில் தெளிக்க வேண்டும்.

படைப்புழு அல்லது வெட்டுப்புழு : படைப்புழுக்களைக் கட்டுப்படுத்த ஸ்பைனோசாடு 0.4 மி.லி (அ) புரோப்பனோபாஸ் 2 மி.லி தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். ஒரு ஏக்கருக்குத் தேவையான நச்சுணவு உருண்டைகளைத் தயார் செய்து பயன்படுத்தலாம்.

அரிசித்தவிடு 5 கிலோ, வெல்லம் 0.5 கிலோ மற்றும் கார்பரில் (50 சதம்) நனையும்தூள் 0.5 கிலோ இம்மூன்றையும் தேவையான அளவு தண்ணீர் சேர்த்து (3 லிட்டர்) சிறுசிறு உருண்டைகளாக உருட்ட வேண்டும். இந்த நச்சுணவு உருண்டைகளைத் தயார் செய்தவுடன், வயலைச்சுற்றிலும் வரப்பு ஓரங்களிலும், வயலில் தெரியும் வெடிப்பு மற்றும் பொந்துகளிலும் மாலை வேளைகளில் வைத்து புழுக்களைக் கவர்ந்து அழிக்க வேண்டும்.


என்.பி.வி நச்சுயிரியை ஏக்கருக்கு 200 மி.லி என்ற அளவில் வெல்லம் (1.0 கிலோ, ஏக்கர்) மற்றும் டீப்பாலுடன் (100 மி.லி/ஏக்கர்) சேர்த்து 150 லிட்டர் தண்ணீரில் கலந்து மாலை நேரங்களில் தெளிக்க வேண்டும். இலைப்பேன் மற்றும் அசுவினி இவற்றைக் கட்டுப்படுத்த இமிடாகுளோபிரிட் 0.4 மி.லி. (அ) அசிபேட் 1 கிராம், ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். சுருள் பூச்சி இதைக் கட்டுப்படுத்த ஸ்பைனோசாடு 0.4 மி.லி, இமிடாகுளோபிரிட் 0.4 மி.லி (அ) டைமெத்தோயேட் 2 மி.லி மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

வேரழுகல் நோய் உயிரியல் முறை: ஒரு ஏக்கருக்கு சூடோமோனாஸ் / புளூரசன்ஸ் 1.0 கிலோவுடன் 20 கிலோ நன்கு மக்கிய தொழு உரம் (அ) மணல் இட வேண்டும். நோய் தென்படும் இடங்களில் கார்பன்டாசிம் 1 கிராம் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். புரோப்பனோசோல் 2 கிராம், ஒரு கிலோ விதைக்கு என்ற அளவில் கலந்து விதைக்கும் முன் விதை நேர்த்தி செய்ய வேண்டும். அறுவடை முதிர்ந்த இலைகள் காய்ந்து விடுதல் மற்றும் மேல்மட்ட இலைகள் மஞ்சளாவதும் முதிர்ச்சியைக் குறிக்கும். கால அளவைப் பொறுத்து பயிர் கண்காணிக்கப்பட வேண்டும்.

தோராயமாக ஒரு சில செடிகளைப் பிடுங்கி காய்களை உரிக்க வேண்டும். ஓட்டின் உட்புறம் வெள்ளையாக இல்லாமல் பழுப்பு கலந்த கறுப்பு நிறத்தில் இருப்பின் அது முதிர்ச்சி நிலையைக் குறிக்கிறது. அறுவடைக்கு முன் நீர் பாய்ச்ச வேண்டும். நீர் பாய்ந்த நிலம் சுலபமாக அறுவடைக்கு உதவுகிறது. மண்ணில் போதுமான ஈரப்பதம் இருப்பின் அறுவடைக்கு முன் நீர் பாய்ச்சத் தேவையில்லை.

பிடுங்கப்பட்ட செடிகளைக் குவியலாக வைக்கக் கூடாது. ஏனெனில் ஈரமாக உள்ள போது, குறிப்பாகக் கொத்து ரகங்கள் முளைக்க ஆரம்பித்து விடும். காய்களை நான்கிலிருந்து ஐந்து நாட்கள் வரை வெயிலில் உலர்த்த வேண்டும். இரண்டு அல்லது மூன்று நாட்கள் காய வைப்பது முழுவதுமான காய்தலுக்கு உதவுகிறது. காய்ந்த காய்களுக்குள் ஈரப்பதம் வருவதைத் தவிர்க்க வேண்டும். மகசூல் ஒரு ஏக்கருக்கு 600 கிலோ வரை கிடைக்கும். ஊடுபயிர் கடலைச்செடிகளுக்கு ஊடுபயிராய் ஆமணக்கு, துவரை பயிரிடலாம்.

## நிலக்கடலையின் நோய்கள்:



இலைப்புள்ளி நோய்: விதைத்த ஒரு மாதத்தில் இந்நோய்த் தாக்கம் ஏற்படலாம். சிறிய சோகை (பசுமை சோகை போன்ற புள்ளிகள் தோன்றி, பின்னர் அவற்றின் நடுப்பகுதி கரும் நிறத்திற்கு மாறும். இலையின் அடிப்பகுதியில் அரக்கு நிறப்புள்ளிகளைக் காணலாம். இலை, காம்பு, தண்டு ஆகிய இடங்களில் இப்புள்ளி தேன்றும். பாரம்பரிய ஃ சாகுபடி முறை: எதிர்ப்புத் திறன் கொண்ட பயிர் வளர்த்தல். ஊடுபயிராக சோளத்தை வளர்க்கலாம் (சோளம் 1 பகுதி, நிலக்கடலை 3 பகுதி).



பூச்சி மற்றும் நோய்க் கிருமிகளுக்கு மாற்று ஊணூட்டி அல்லாத பயிரை ஊடுபயிராக தேர்வு செய்யலாம். பயிறு வகை அதில் சிறந்தது.

### இயந்திர முறை:

பயிர் மீதங்களை நிலத்தின் அடியில் புதைத்திட வேண்டும். நோய் தாக்கப்பட்ட பயிர்களை அகற்ற வேண்டும். உயிரியல் முறை: இலைகளில் படும்படி வேப்ப இலை சாற்றை (2-5%) தெளிக்க வேண்டும். விதைத்த நான்காம் வாரத்திலிருந்து மூன்று முறை (2 வார இடைவெளியில்) தெளிக்க வேண்டும். பின்பருவ இலைப்புள்ளி நோய்: வித்திட்ட 55-57ஆம் நாளில் இந்நோய் தாக்குதல் வரலாம். கருமை நிற வட்ட புள்ளிகள் இலைகளில் தோன்றும்.

### பாரம்பரிய கட்டுப்பாட்டு முறை:

எதிர்ப்புத் திறன் கொண்ட பயிர்களை நட வேண்டும். சோளம்ஃகம்பு 1 பங்கு, நிலக்கடலை 3 பகுதி என ஊடு பயிர்களை பயிரிடலாம். பயிர் சுழற்சி பயிறு வகை சிறந்தது. உயிரியல் கட்டுப்பாட்டு முறை: துரு நோய் (பக்சினியா அராக்கிடிஸ்): ஆரஞ்சு (அரக்கு) நிறத்தில் சிறிய துரு புள்ளிகள் மேலெழுந்தவாறு தோன்றும். இவை இலையின் அடிப்பாகத்தில் காணப்படும். துருப்புள்ளிகளில் பொடி போன்ற பூஞ்சானைக் காணலாம். பண்பாட்டுமுறையில் நோய் கட்டுப்பாடு: பயிர்சுழற்சி மற்றும் வயல் வரப்புகளை சுத்தமாக வைக்க வேண்டும். சான்றிதல் பெற்ற வித்துக்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும். ஜீன்மாதம்முதல்வாரத்திலேயே வித்துக்களை விதைக்க வேண்டும்.

இது நோய் தாக்குதலை குறைக்கும். ஊடுபயிரான் சோளம் 1 பகுதி நிலக்கடலை 3 பகுதி என பயிரடலாம். உச்சி அழுகல் நோய்: அறிகுறிகள்: வித்துக்கள் மொட்டு மலரும் முன்னரே அழிந்து/சிதைந்து விடும். பூக்கள் மலர்ந்த பின்பு இந்நோய் தாக்கினாலும் விதைகள் அழுகி விடும். மலரின் கீத்துப் பகுதி அழுகி காணப்படும். முதிர் பயிர்களில் அழுகல் அடி தண்டிலிருந்து ஆரம்பித்து பின்னர் தலைவரை பரவி, பயிரை அழித்து விடும். தடுப்பு முறை: பயிர் சுழற்சி.

தாவரக் கூளங்களை அகற்றிடல் வேண்டும். ஆழமாக உழுவதன் மூலம், மேல் உள்ள மட்கும் குப்பைகளை நிலத்தினும் புதைக்கலாம். 1 கிலோ வித்துடன் 4 கிராம் டிரைக்கோடெர்மா விரிடே / டிரைக்கோடெர்மா ஹாரிசானம் எனும் நுண்ணுயிரியை கலந்து பின்னர் விதைக்கலாம். அவற்றை 25-62.5 கிலோ என்ற அளவில் ஒரு எக்டர் வயலில் இடலாம். அவ்வாறு வயலில் டிரைக்கோடெர்மாவை இடும்பொழுது ஆமணக்கு புண்ணாக்கு அல்லது வேப்பம் புண்ணாக்கு போன்றவற்றை அவற்றுடன் பயன்படுத்த வேண்டும்.

### மொட்டு சோகை நோய்

வெளிப்பச்சைப்பட்டை இலைகளில் தோன்றும். நுனிமொட்டு காய்ந்து வாடிவிடும். தடுப்பு முறைகள்: முன் விதைத்தல் பலன் தரும். எதிர்ப்பு சக்தி கொண்ட வளர்க்கலாம். களைச் செடிகளை அகற்றி விட வேண்டும். புள்ளிகள் கீழுள்ள இலையில் தோன்றும் அவை இலை முழுதும் பரவும். முற்றிய நிலையில் இது முழு இலையையும் வாடியது போலாக்கிவிடும். தடுப்பு முறைகள்: வெயில் காலத்தில் ஆழமாக உழுதல். நல்ல தரமான, சான்றிதழ் பெற்ற வித்தினை பயன்படுத்துதல். செடி கூளங்களை அகற்றல்.

நிலக்கடலையில் மாங்கனீஸ் சத்து நிறைய உள்ளது. நாம் உண்ணும் உணவில் இருந்து கால்சியம் நமது உடலுக்கு கிடைக்கவும் பயன்படுகிறது.

குறிப்பாக பெண்கள் நிலக்கடலையை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் எலும்புத்துளை நோய் வராமல் பாதுகாத்துக் கொள்ளலாம். நிலக்கடலையை தினமும் 30 கிராம் அளவுக்கு சாப்பிட்டு வந்தால் பித்தப்பை கல் உருவாவதைத் தடுக்க முடியும். நிலக்கடலையில் ரெஸ்வரெட்ரால் என்ற சத்து நிறைந்துள்ளது. இது இதய வால்வுகளை பாதுகாக்கிறது. இதய நோய்கள் வருவதையும் தடுக்கிறது. இதுவே மிகச் சிறந்த ஆண்டி ஆக் ஸிடண்டாகவும் திகழ்கிறது.

இது இளமையை பராமரிக்க பெரிதும் உதவுகிறது. நிலக்கடலையில் பாலிபீனால்ஸ் என்ற ஆண்டி ஆக்ஸிடண்டு உள்ளது. இது நோய் வருவதை தடுப்பதுடன் இளமையை பராமரிக்கவும் பயன்படுகிறது.



கம்பு போன்ற ஊடுபயிர்களை பயன்படுத்த வேண்டும் (7 பங்கு நிலக்கடலை 1 பங்கு கம்பு). கலஹஸ்தி மலடி நோய்: பாதிக்கப்பட்ட செடிகள், குன்றிய வளர்ச்சி மற்றும் அதிக பச்சை நிறத்தில் தோற்றமளிக்கும். இளம் காய்கலில் சிறிய மேலெழுந்த புள்ளிகள் காணப்படும். பின்னர் இப்புள்ளிகள் ஒன்றிணைந்து காயின்மொத்த உருவையும் மாற்றும்.

தடுப்பு முறைகள்: எதிர்ப்புத் திறன் கொண்ட பயிரை வளர்க்கவும் - திருப்பதி 3, திருப்பதி 2. நெல் விதைத்த பின்னர் நிலக்கடலையைப் பயிரிடவும். இது நோய் தாக்கத்தைக் குறைக்கும். விதைப்புள்ளி (பரவைக் கண்) நோய்: சிறிய மஞ்சள் நிற

பெண்களின் இயல்பான ஹார்மோன் வளர்ச்சியை நிலக்கடலை சீராக்குகிறது. இதனால் பெண்களுக்கு விரைவில் குழந்தை பேறு ஏற்படுவதுடன் பெண்களுக்கு ஏற்படும் மார்பகக்கட்டி உண்டாவதையும் தடுக்கிறது. பெண்களுக்கு பெரிதும் தேவையான போலிக் அமிலம், பாஸ்பரஸ், கால்சியம், பொட்டாசியம், துத்தநாகம், இரும்பு, விட்டமின்கள் நிலக்கடலையில் நிறைந்துள்ளன. இதன் காரணமாக பெண்களுக்கு கருப்பை கட்டிகள், நீர்கட்டிகள் ஏற்படுவதையும் தடுக்கிறது. மூளை வளர்ச்சிக்கும், ஞாபக சக்திக்கும் பெரிதும் பயனளிக்கிறது. ரத்த ஓட்டத்தையும் சீராக்கும் தன்மை கொண்டது.

# இந்திய மண்ணில் வேளாண் சுற்றுலா



செ.சரத்

சர்வதேச ரீதியாக வேளான் சுற்றுலா பெற்றுள்ள முக்கியத்துவம் குறித்து கடந்த வாரம் பார்த்திருந்தோம். இலங்கையிலும் இதனை அபிவிருத்தி செய்ய முடியும். எமது அண்டை நாடான இந்தியாவில் இது எவ்வாறு வளர்ச்சியடைந்திருக்கின்றது என்பது எமக்கு ஒரு முன்னுதாரணமாக இருக்கும் என்பதால் அது குறித்து இந்த வாரம் பார்ப்போம்.

இந்தியாவின் வளங்களை எடுத்து ரைக்காத கவிஞர்களே இல்லை என்று கூறும் அளவுக்கு பல மொழிகளின் இலக்கியங்களிலும் இந்தியாவின் வளங்கள் பாடப்பட்டுள்ளன. இந்தியாவின் மொத்த சாகுபடி செய்யப்படும் பரப்பளவு 141 மில்லியன் ஹெக்டர். அதில் வெவ்வேறு காலநிலைகள் நீக்கமற நிறைந்து இருப்பதுடன் கிட்டத்தட்ட 73 மில்லியன் ஹெக்டர் நீர்ப்பாசன வசதியை உள்ளடக் கியுள்ளது. இதனால்தான் 'சோலை நடுவில் சொக்குப் பச்சைப் பட்டுடை படர்ந்து கிடந்தது போல்' வேளாண் நிலங்கள் காட்சியளிக் கின்றன.

அத்தகைய சோலையின் வசந்த வாசலில் தஞ்சம் அடைய வேண்டுமானால் வேளாண் சுற்றுலா மட்டுமே ஆகச்சிறந்த வழியாகும். ஆம், இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் வேளாண் சுற்றுலாவின் வருமானம் 20% அதிகரித்து வருவதாக வணிக பொருளாதார ஆய்விதழ் கூறுகிறது. அப்படி அந்த வருமானத்தை சாத்தியப்படுத்திய மகாராஷ்டிரா மாநிலத்தின் வேளாண் சுற்றுலா வரலாற்றை பற்றி கூறாமல் இந்தியாவின் வேளாண் சுற்றுலாவை எழுத முடியாது.

மகாராஷ்டிரா மாநிலத்தில் இருக்கும் வேளாண்மைச் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்தான் முதன் முதலில் இந்தியாவில் வேளாண் சுற்றுலாவுக்கு விதை போட்டது. வேளாண்மைச் சுற்றுலா வளர்ச்சிக் கழகமானது 2004-ம் ஆண்டு பாண்டுரங் தவாரேவால் ஆரம்பிக்கப்பட்டது. 500 விவசாயிகளுக்கு பயிற்சியும், 152 வேளாண் பண்ணைகளும் தேர்வு செய்யப்பட்டன. அதன் பிறகு தேர்வு செய்யப்பட்ட பண்ணைகளில் நாளடைவில் வேளாண் சுற்றுலா செய்து வரும் விவசாயிகளின் வருமானம் 25% கூடுதலாக உயர்ந்தது.

தொடர்ந்து வேளாண்மைச் சுற்றுலா வளர்ச்சிக் கழகமானது விவசாயிகளுக்கு வேளாண் சுற்றுலா சார்ந்த பயிற்சி அளிப்பது, அங்குள்ள இளைஞர்களை சுற்றுலா வழிகாட்டியாய் நியமிப்பது, சுற்றுலா வாசிகளுக்கு உணவு தயார் செய்ய மகளிர் சுயஉதவிக் குழுக்களை பணியமர்த்துவது, பள்ளிக் குழந்தைகளை அழைத்து வந்து வேளாண் பண்ணைகளை பார்வையிடச் செய்வது, இவற்றுடன் மாநில அரசாங்கத்துடன் தொடர்பு ஏற்படுத்தி புனே மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் கடன் வசதி ஏற்படுத்தித் தருவது எனப் பல பணிகளை செய்து வருகிறது.

அதன் விளைவாக தற்போது மகாராஷ்டிராவில் மொத்தம் 328 பண்ணைகள் வேளாண் சுற்றுலாவை செயல்படுத்தி வருகின்றன. அதிலும் 2018 முதல் 2020 வரையிலான ஆண்டுகளில் 17 லட்சத்துக்கும் மேற்பட்ட சுற்றுலாவாசிகள் வருகை புரிந்ததன் விளைவாக ரூ.60 கோடி வருமானமாக அங்குள்ள விவசாயி களுக்கு கிடைத்துள்ளது.

அத்துடன் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது. வேளாண் சுற்றுலாவின் வளர்ச்சியைக் கண்ட மாநில அரசாங்கத்தின் சுற்றுலாத்துறை 2020-ஆம்ஆண்டில்வேளாண்சுற்றுலாவுக்கென்றே தனியாக கொள்கையை வகுத்தது. அந்தக் கொள்கையின்படி விவசாயிகள், கூட்டுறவு நிறுவனங்கள், வேளாண் ஆராய்ச்சி மையங்கள், வேளாண்மைப் பல்கலைக் கழகங்கள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் வேளாண் சுற்றுலாவை ஆரம்பித்துக் கொள்ளலாம்.

இதற்கு மாநில அரசின் சுற்றுலாத்துறை நேரடியாக சான்றிதழ் அளித்து அங்கீகாரம் தருகிறது. அத்தோடு அங்கீகாரம் பெற்றால் வங்கிகளில் கடன் மற்றும் இதர சலுகைகளையும் பெறலாம். இந்தக் கொள்கையின் படி வேளாண் சுற்றுலாவை ஆரம்பிக்க எண்ணுவோர் முதலில் இரண்டு முதல் ஐந்து ஏக்கர் அளவிலான நிலம் வைத்திருக்க வேண்டும்.

அத்தோடு அந்த நிலத்தில் சுற்றுலா வாசிகள் தங்குவதற்கு ஏற்ற வகையில் போதிய அளவிலான அறைகளும், உணவு உண்ணும் இடமும் இருக்க வேண்டும். வேளாண் சுற்றுலா மையமாக பண்ணை யை பதிவு செய்ய ஆரம்பத்தில் ரூ.2,500 கட்டணம் செலுத்த வேண்டும். அதனை ரூ.1000 கொடுத்து ஐந்து ஆண்டுக்கு ஒருமுறை புதுப்பித்துக்கொள்ள வேண்டும். இவற்றை மகாராஷ்டிரா வேளாண் மற்றும் ஊரக சுற்றுலா வளர்ச்சிக் குழுவானது முறைப்படுத்தி ஊக்குவிக்கிறது.

# வேலையில் திருப்தி எப்போது வரும்?

ராமானுஜம் கோவிந்தன்




“குரு சிஷ்யன்“ திரைப்படத்தில் ஒரு நகைச்சுவைத் துணுக்கு வரும். ரஜினிகாந்தும் பிரபுவும் சிறையில் இருப்பார்கள். அப்போது ரஜினிகாந்த் தன்னுடன் சிறையில் இருப்பவரிடம், “நீங்க என்ன தப்பு செய்துவிட்டு ஜெயிலுக்கு வந்தீங்க?” எனக் கேட்பார். அதற்கு அவர், “பித்தளைச் செம்பைத் திருடி அதை வித்து அந்தப் பணத்துல பேரீச்சம்பழம் வாங்கிச் சாப்பிட்டேன்” என்பார். “ஏம்ப்பா, பித்தளைச் செம்பைத் திருடி அதை வித்து அந்தப் பணத்துக்குப் பேரீச்சம்பழம் வாங்கறதுக்கு, பேசாம பேரீச்சம்பழத்தையே திருடியிருக்கலாமே?” என ரஜினி அவரைக் கிண்டல் செய்வார்.

யாரிடமாவது “உங்கள் வாழ்க்கையின் லட்சியம் என்ன” எனக் கேட்டு அதற்கு அவர், “கஷ்டப்பட்டுப் படித்து ஐ.ஐ.டி-யில் சேர்ந்து முதல் மாணவனாகத் தேறி அமெரிக்கா சென்று ஆப்பிள் நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்து, பிறகு அந்த வேலையை விட்டுவிட்டு நாடு திரும்பி விவசாயம் பார்க்கப் போகிறேன்” என்று சொன்னால் அவரை ரஜினி போல் நாம் கிண்டல் செய்வோம் அல்லவா? ஆனால், கிண்டல் செய்யத் தேவையில்லை. ஒரு விஷயத்தில் ஆர்வம் எப்படி ஏற்படுகிறது, அது ஒரே விஷயத்தில் நீண்டகாலத்துக்கு எப்படி நிலைத்து நிற்கிறது என்பதைப் பற்றிய புரிதல் நம்மில் பலருக்கும் இல்லை.

‘கனவுகளைப் பின்தொடருங்கள் என்பது நாம் இளைஞர்களுக்குக் கொடுக்கும் தவறான யோசனை’ என்று கால் நியூபோர்ட் சொல்கிறார் எனச் சொன்னோம் அல்லவா? அவர் எழுதிய ‘ளுழ பழழன வாநல உயவ’வ பைழெசந’ என்ற புத்தகத்தில் மேலும் அதை விளக்குகிறார்.

கிட்டத்தட்ட 70 வீதமானோர் தாங்கள் செய்யும் வேலையைப் பிடிக்காமல் செய்கிறார்களாம். அதேபோல் பிடித்த விஷயத்தைச் செய்யும்போது அவர்களது உற்பத்தித் திறன் அதிகரிப்பதாகவும் பல ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அப்படியானால், கனவுகளைப் பின் தொடர்ந்து செல்வது, நமக்குப் பிடித்த வேலையைச் செய்வதுதானே சரியான முடிவாக இருக்க முடியும் எனக் கேட்கலாம்!

முதலில் பார்த்ததுபோல் அமெரிக்காவில் மென்பொருள் வல்லுநர் வேலையை உதறிவிட்டு வந்து இயற்கை விவசாயம் செய்பவர், அரசு வேலையை விட்டுவிட்டு வனவிலங்குகளைப் புகைப்படம் எடுக்கச் சென்றவர் என்றெல்லாம் அடிக்கடி செய்திகளில் பார்க்கிறோம் . இவர்களில் நிஜமாகவே தீவிர விழைவுடன் செய்பவர்கள், இருப்பவர்கள் இருந்தாலும், ‘பலருக்கும் தாங்கள் செய்யும் வேலையில் இருக்கும் அலுப்பு மற்றும் அழுத்தத்தினால் அதிலிருந்து வெளிவந்தால் போதும் என்ற மனநிலை காரணமாகவே வெளியேறுகிறார்கள்’ என்கிறார் அவர்.

1987-ல் அமெரிக்காவில் எடுத்த ஆய்வு ஒன்றில் கிட்டத்தட்ட 65% பேர் தங்கள் வேலையில் திருப்திகரமாக இருப்பதாகத் தெரிவித்திருந்தனர். முப்பது வருடங்கள் கழித்து எடுக்கப்பட்ட ஆய்வுகளில் அது அப்படியே மாறியிருக்கிறது. அதாவது 65ழு பேர் தங்கள் வேலையில் திருப்தியாக இல்லை என்கிறார்கள். இத்தனைக்கும் 1987-ல் இருந்ததைப் போல இல்லாமல் இப்போது பலரும் வேலையில் சேரும்போது பிடித்த வேலையாகப் பார்த்துச் சேர்கின்றனர். அதாவது கனவுகளைப் பின் தொடருங்கள் என்ற கோஷம் 1970-களில் தொடங்கி இப்போது வரை மிகப் பிரபலமாக இருந்து அதன்படி கனவுகளைத் துரத்தியும் பலருக்குத் தாங்கள் செய்யும் வேலை பிடித்தமில்லாமல் போகிறது.

இதற்குக் காரணம் ‘கனவுகளைப் பின் தொடருங்கள்’ என்பதைத் தவறாகப் புரிந்துவைத்திருக்கிறோம். ஒரு துறையில் நமக்கு ஏற்கெனவே தீராத ஆர்வம் இருக்கும் (Passion). அதைக் கண்டடைந்தவுடன் “கண்டேன் சீதையை” என வாழ்க்கையில் செட்டில் ஆகிவிடலாம் என நமது கனவுத் தொழிலைக் கண்டடைவதை சுவீப் விழுவது போல் நினைக்கிறோம்.

ஆனால் வாழ்க்கையில் வெற்றி பெற்றவர்கள் அனைவருமே தங்கள் கனவுகளைப் பின் தொடர்வதாகச் சொல்கிறார்களே? ‘பைனான்ஷியல் டைம்ஸ்’ என்ற இதழின் பத்திரிகையாளர் ஹெஸ்டர் லேஸி (Hester Lacey) 2011-லிருந்து வாரா வாரம் ஒரு வெற்றியாளரைப் பேட்டி கண்டு எழுதுகிறார். சாதாரண ஆட்களை இல்லை. அமேசான் நிறுவனர் ஜெஃப் பெசோஸ், சல்மான் ருஷ்டி இந்த மாதிரி பெரும் பிரபலங்களை. அவர்கள் அனைவரிடமும் அவர் ஒரே மாதிரியான கேள்விப் பட்டியலைத்தான் கேட்கிறார். அதில் ஒரு கேள்வி, “எது உங்களை உந்தித் தள்ளுகிறது?” என்பது. அனேகமாக எல்லாப் பிரபலமும் சொல்லும் விஷயம், தாங்கள் செய்வதை மிகவும் விரும்பிச் செய்கிறோம் என்பதுதான்.

இதைப் படிக்கும் பலருக்கும் தாங்களும் தாங்கள் விரும்பியதைச் செய்தால் வாழ்வில் வெற்றியடையலாம் என்ற எண்ணம் தோன்றும். எப்படிப் பணம் சம்பாதிப்பது என்பதைக் கற்பதற்காக ஒருவர் பணக்காரர்களை எல்லாம் கவனிக்கிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். பணக்காரர்கள் எல்லாரும் கோட் சூட் அணிகிறார்கள், நல்ல விலையுயர்ந்த கார்களில் வருகிறார்கள், ரோலக்ஸ் வாட்ச் கட்டுகிறார்கள். இதையெல்லாம் பார்த்துவிட்டு அவர் “நாமும் விலையுயர்ந்த சூட்,

கார், வாட்ச் எல்லாம் வாங்கினால் பணக்காரர் ஆகிவிடலாம்" என்ற முடிவுக்கு வந்தால் எவ்வளவு அபத்தமாக இருக்கும்?!

அதுபோன்றதுதான் 'நாம் விரும்பியதைச் செய்தாலே வெற்றி அடைந்துவிட முடியும்' என எண்ணுவதும். அவர்கள் திறமையை வளர்த்துக் கொண்டு வெற்றி அடைவதால் அவர்கள் தாங்கள் செய்வதை விரும்புகிறார்கள். அதை விட்டுவிட்டு விரும்புவதைச் செய்கிறார்கள் என்பதை மட்டுமே பார்ப்பதால் வரும் கோளாறுதான் 'கனவுகளைப் பின் தொடருங்கள்' என்னும் அறிவுரை.

வேலையில் திருப்தி (Job satisfaction) பற்றிய உளவியல் ஆய்வுகளில், ஒரு வேலை நமக்குப் பிடிப்பதற்கு மூன்று காரணங்கள் தேவை எனக் கண்டறிந்துள்ளனர்.

1. சுதந்திரம் (Autonomy)- அந்த வேலையில் நமக்குப் பிடித்த வகையில் செய்ய சுதந்திரம் இருக்க வேண்டும்.
2. திறமை (Competence)- அந்த வேலையில் நமக்குத் திறமை இருக்க வேண்டும். அல்லது நமது திறமை வெளிப்பட வேண்டும்.
3. நோக்கம் (Purpose) - அந்தச் செயல் உருப்படியான ஒரு விஷயத்தைச் செய்வதாக இருக்க வேண்டும்.

உண்மையில் இந்த மூன்று விஷயங்கள் இருந்தால் தானாகவே அதில் நமக்கு விருப்பம் வந்துவிடும் . இந்தத் தொழில் நம்முடைய கனவுகளுக்கு ஏற்றதுதானா என்பதைப் பார்ப்பதைவிட, 'இதில் மேலே கூறப்பட்டுள்ள விஷயங்கள் இருக்கின்றனவா... இல்லை என்றால் அவற்றை எப்படி வளர்த்துக்கொள்வது' என்று பார்ப்பதே உபயோகமானது.

நிறைய பேர் தாங்கள் பார்த்து வந்த வேலையை விட்டுவிட்டுச் சுயமாக இன்னொரு தொழிலைத் தொடங்குவதற்கு முக்கிய காரணம் முதலில் சொல்லியிருக்கும் கட்டுப்பாடுகள் அற்ற சுதந்திரம்தான். காலை எத்தனை மணிக்கு எழ வேண்டும் என்பதிலிருந்து, புராஜெக்ட் ரிப்போர்ட், டார்கெட் என எல்லாவற்றுக்கும் நமது செயல்களைப் பிறர் கட்டுப்படுத்துவது போன்று இருப்பது மிகவும் மன அழுத்தத்தைத் தரக்கூடியது. இதனால்தான் பலரும் இதுபோல் தொழில்களை மாற்றுகின்றனர் என்கிறார் நியூபோர்ட்.

உண்மைதானே? அமெரிக்க வேலையை விட்டுவிட்டு புதிதாக வனவிலங்குப் புகைப்படம் எடுக்கும் பணியைச் செய்பவர், அதே விஷயத்தை ஒரு அலுவலகத்தில் வேலையில் சேர்ந்து செய்தால் என்ன ஆகும்? 'மாதம் இத்தனை வனவிலங்குகள் புகைப்படங்கள் எடுக்க வேண்டும், இப்படி இருக்க வேண்டும்' என்றெல்லாம் டார்கெட் வைத்து நிறுவனம் அழுத்தம் கொடுத்தால் அவர் வனவிலங்குகள் என்ன? அன்றாடம் கண்ணில் படும் அணில், ஆடு, இலை, ஈ போன்றவற்றைப் புகைப்படம் எடுக்கும் ஆர்வத்தைக்கூட இழந்திருப்பார். ஆகவே விரும்பியதைச் செய்யக்கூடிய சுதந்திரம் மிக முக்கியம்.




ஆனால், வெறும் மனதுக்குப் பிடித்ததைச் செய்யும் சுதந்திரம் மட்டுமே வெற்றி பெறப் போதுமானதாக இருக்காது . புதிய தொழில்களைச் செய்ய ஆரம்பிக்கும்போது அவர்கள் தங்களுக்கு இருக்கும் மேலோட்டமான ஆர்வத்தினை (Interest) தீவிர வேட்கை (Passion) என நினைத்துப் புதிய விஷயங்களில் ஈடுபடுகின்றனர். உரிய முதலீடு இல்லாமல் தொழில் தொடங்குவது போல், இவர்களில் பலர் உரிய வாழ்க்கைத்தொழில் முதலீடு (Career capital) இல்லாமல் களத்தில் இறங்குகிறார்கள். இதுதான் அவர்கள் தோற்பதற்கான காரணம். தோற்பது மட்டுமல்ல, நாம் அடிக்கடி சொல்வதுபோல் 'இதுதான் என் வாழ்க்கை' என்று சொல்லக்கூடிய விஷயத்தில் சட்டென்று நமது ஆர்வம் குறைவதற்கும் இதுதான் காரணம். அது என்ன வாழ்க்கைத்தொழில் முதலீடு?

நீங்கள் எந்தத் துறையில் ஈடுபடுகிறீர்களோ அதில் அதீதமான திறமையை வளர்த்துக்கொள்வதுதான் அது. இதைத்தான் 'So good they can't ignore you' எனத் தலைப்பிலேயே சொல்கிறார் நியூபோர்ட். மற்றவர்கள் உங்களை கவனிக்காமல் இருக்கவோ அலட்சியப் படுத்தவோ முடியாத அளவுக்கு உங்கள் தொழிலில் திறமையை வளர்த் துக்கொள்ள வேண்டும். இதுதான் இரண்டாவதாகச் சொல்லப்படும் திறமை (Competence). இன்னும் சொல்லப் போனால் மற்ற இரண்டையும்விட இதுதான் மிக முக்கியம்.

இந்தத் தொழில் நம்முடைய விருப்பங்களுக்கும் கனவுகளுக்கும் ஏற்றதா என்று மட்டும் பார்ப்பதை விருப்ப மனநிலை (Passion Mindset) என்கிறார்கள். இதற்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்தால் எந்தத் தொழிலாக இருந்தாலும், நம்மால் நீண்ட நாளுக்கு அதில் ஆர்வத்தைத் தக்க வைத்துக் கொள்ள முடியாது. காரணம், திறமை இல்லாமல் முன்னேற்றம் கிடைக்காது. முன்னேற்றம் இல்லை என்றால் ஆர்வம் நீண்டநாள் நீடிக்காது. நீண்ட நாள் விடாப்பிடியாக ஒரு விஷயத்தைச் செய்யாமல், அதில் வெற்றி காண முடியாது.

இந்த விருப்ப மனநிலைக்கு மாறாக நியூபோர்ட் சொல்வது செயல்திறன் மனநிலை (Craftsmanship). அதாவது, ஒரு துறையில் எப்படி நமது திறமையை வளர்த்துக்கொண்டு அதில் ஆகச் சிறந்தவர்களாக இருப்பது என்பதற்கு முக்கியத்துவம் கொடுப்பது தான் அந்த மனநிலை.

'கனவுகளைப் பின் தொடராதீர்கள்' என நியூபோர்ட் கதறுவதற்கு இன்னொரு முக்கிய காரணம், பலரது கனவுகள் ஒரு வாழ்க்கைத் தொழிலாகச் செய்ய முடியாதவை. 'Passion என்பதைத் தனது வாழ்க்கைத் தொழிலாக (Career) மாற்றுவது அரிது' என்கிறார் அவர். கனடாவில் இளைஞர்களிடையே எடுக்கப்பட்ட ஓர் ஆய்வில் அவர்களில் 84 % பேர் கீழ்க்கண்ட ஐந்தையும் தங்களது கனவாகச் சொல்லியிருக்கின்றனர் - ஹாக்கி, ஸ்கீயிங், நீச்சல், வாசிப்பது, பயணம் செய்வது. இதில் ஹாக்கியைத் தவிர பிறவற்றைத் தொழிலாக வைத்துக்கொள்ள முடியாது. மேலும், விளையாட்டை வாழ்க்கைத் தொழிலாக வைத்துக்கொள்வதில் உள்ள சிக்கல், அதற்கு மற்ற தொழில்களைவிடப் பல மடங்கு அதிகம் திறமையாக இருக்க வேண்டும், கனடா நாட்டிலேயே தலைசிறந்த பதினைந்து ஹாக்கி வீரர்களுள் ஒருவராக இருக்க வேண்டும்.

ஆகவே, இளைஞர்கள் தங்கள் கனவு எனக் கருதுவது பல சமயங்களில் பொழுதுபோக்காகவும் மேலோட்டமான ஆர்வமாகவும் இருக்கும். இதை நம்பி அதனை வாழ்க்கைத் தொழிலாக நினைத்துக் களமிறங்கக் கூடாது என்ற யதார்த்தமான அறிவுரையை வழங்குகிறார் நியூபோர்ட். நாம் எதை அதிகமாக விரும்புகிறோமோ, அதைத்தான் நமது வாழ்க்கைத் தொழிலாக வைத்துக்கொள்ள வேண்டும் என்றால் நம்மில் பலரும் மொபைல் போன் பார்ப்பதைத்தான் தொழிலாக வைத்துக் கொள்ள வேண்டும்.

பிடிக்காததைச் செய்யச் சொல்லவில்லை அவர். ஆனால், ஒரு விஷயத்தில் அபாரமான திறமைசாலியாக இருந்தால் அதன் விளைவாக அந்த விஷயத்தில் தீராத ஆர்வம் வந்துவிடும் என்கிறார்;. 'Passion is the side effect of mastery' என அழகாகச் சொல்கிறார்.

11ம் பக்கத் தொடர்ச்சி........

• ஒரு விற்பனைப் பிரதிநிதி, ஒப்பந்தங்களைப் பாதுகாப்பதற்கு ஈடாக சாத்தியமான வாடிக்கையாளர்களுக்கு சட்டத்துக்குப் புறம்பான பணக்கொடுப்பனவுகளை வழங்கலாம்.

### இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான போராட்டம்:

• இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான கொள்கை: ஏற்றுக்கொள்ளக்கூடிய வணிக நடத்தையை கோடிட்டுக் காட்டும் தெளிவான மற்றும் விரிவான இலஞ்சம் மற்றும் ஊழல் எதிர்ப்பு கொள்கையை செயற்படுத்தவும்.

• மூன்றாம் தரப்பு நிபுணத்துவத்தை பெற்றுக்கொள்ளல்: சாத்தியமான பிரச்சனைகளை அடையாளம் காண, சாத்தியமான வணிகப் பங்காளிகள் மீது முழுமையானகவனத்தைமேற்கொள்ளுங்கள்.

• பரிசுகள் மற்றும் பொழுதுபோக்குக் கொள்கை: நெறிமுறை மோதல்களை உருவாக்குவதைத் தவிர்ப்பதற்காக பரிசுகள் மற்றும்பொழுதுபோக்குகளை ஏற்றுக்கொள்வது மற்றும் வழங்குவது பற்றிய தெளிவான கொள்கையை உருவாக்குங்கள்.

### • கட்டண மோசடி, கொள்முதல் மோசடி மற்றும் பயண மோசடி

இந்த வகையான மோசடிச் செலவுகளை பொய்யாக்குவது அல்லது தனிப்பட்ட இலாபத்திற்காக கொள்முதல் செயன்முறைகளை கையாளுதல் ஆகியவை அடங்கும். போலியான இன்வாய்ஸ்கள் அல்லது செலவு அறிக்கைகளை சமர்ப்பிக்கும் ஊழியர்களால் பணம் செலுத்துதல் மோசடி செய்யப்படலாம். சட்டவிரோதக் கொடுப்பனவிற்கு ஈடாக சில விற்பனையாளர்களிடம் வணிகத்தை வழிநடத்தும் ஊழியர்களால் கொள்முதல் மோசடி செய்யப்படலாம். நிறுவனத்திற்கு தனிப்பட்ட பயணச் செலவுகளைச் செலவிடும் ஊழியர்களால் பயண மோசடி செய்யப்படலாம்.

### • சொத்துக்கள் மற்றும் தகவல் சுரண்டல்

சொத்துக்கள் மற்றும் தகவல்களைச் சுரண்டுவது, சொத்துக்களைத் திருடுவது முதல் இரகசியத் தகவலை தவறாகப் பகிர்வது வரை இருக்கலாம். ஊழியர்கள் தங்கள் சொந்த பயன்பாட்டிற்காக கம்ப்யூட்டர்கள் அல்லது உபகரணங்கள் போன்ற நிறுவன சொத்துக்களை திருடலாம். அவர்கள் போட்டியாளர்கள் அல்லது பிற மூன்றாம் தரப்பினருக்கு ரகசிய நிறுவனத்தின் தகவலை விற்கலாம் அல்லது பகிர்ந்து கொள்ளலாம்.

### உள் மோசடியை எவ்வாறு தடுப்பது?

உள் மோசடியைத் தடுக்க வணிகங்கள் செய்யக்கூடிய பல விஷயங்கள் உள்ளன. மிக முக்கியமான சில:



• வலுவான உள் கட்டுப்பாடுகளை செயல்படுத்தவும். உள் கட்டுப்பாடுகள் என்பது ஒரு நிறுவனம் மோசடியைத் தடுக்க, கண்டறிய மற்றும் தடுக்கும் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் ஆகும். இந்தக் கட்டுப்பாடுகளில் கடமைகளைப் பிரித்தல், பின்புலச் சரிபார்ப்புகள் மற்றும் வழக்கமான தணிக்கைகள் போன்றவை அடங்கும்.

• நெறிமுறைக் கலாச்சாரத்தை உருவாக்குங்கள். ஒரு வலுவான நெறிமுறைக் கலாச்சாரம் என்பது ஊழியர்கள் நேர்மையாகவும் நெறிமுறையாகவும் நடந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. நிறுவனங்கள் நடத்தை நெறிமுறைகள், நெறிமுறைகள் பயிற்சி வழங்குதல் மற்றும் நெறிமுறையாக செயற்படும் ஊழியர்களுக்கு வெகுமதி அளிப்பதன் மூலம் நெறிமுறைகளின் கலாச்சாரத்தை உருவாக்க முடியும்.

• பணியாளர் செயற்பாட்டை கண்காணிக்கவும். சந்தேகத்திற்கிடமான நடத்தையைக் கண்டறிய வணிகங்கள் ஊழியர்களின் செயற்பாட்டைக் கண்காணிக்க வேண்டும். பரிவர்த்தனை கண்காணிப்பு மற்றும் தரவு பகுப்பாய்வு போன்ற பல்வேறு முறைகள் மூலம் இதைச் செய்யலாம்.

• மோசடி புகார். சந்தேகத்திற்கிடமான மோசடி குறித்து பதிலடிக்கு பயப்படாமல் புகார் செய்ய பணியாளர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும். ஊழியர்கள் மோசடியை அநாமதேயமாகப் புகாரளிக்க நிறுவனங்கள் ஹாட்லைன் (hotline) அல்லது பிற பொறிமுறையை அமைக்கலாம்.

நிறுவனக் கண்ணோட்டம் மற்றும் வரி வசூல் மற்றும் இணக்கத்தில் அரசாங்கக் கண்ணோட்டத்தில் உள்ள வரியின் தாக்கம்

### வரி வசூல் மற்றும் இணக்கம் மீதான உள் மோசடியின் தாக்கம்

நிறுவனங்கள் மற்றும் அரசாங்கத்திற்கு வரி வசூல் மற்றும் இணக்கம் ஆகியவற்றில் உள் மோசடி குறிப்பிடத்தக்க எதிர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்தும். ஒவ்வொரு கண்ணோட்டத்திலிருந்தும் விளைவுகளின் தாக்கங்கள் சில பின்வருமாறு:

### நிறுவனங்களுக்கு ஏற்படக்கூடிய தாக்கம்:

• குறைக்கப்பட்ட வரிப் பொறுப்பு: மோசடி நடவடிக்கைகள் புகாரளிக்கப்படாத வருவாயை உருவாக்கினாலோ அல்லது விலக்குகளை உயர்த்தினாலோ, உள் மோசடி வரிகளைக் குறைவாகச் செலுத்துவதற்கு வழிவகுக்கும். இது நிறுவனத்தின் வரிச்சுமையை குறைக்கின்றது ஆனால் அதன் நிதி வெளிப்படைத்தன்மையை பலவீனப்படுத்துகின்றது.

• அபராதம் மற்றும் வட்டி: மோசடியான வரி நடைமுறைகள் கண்டறியப்பட்டால், நிறுவனங்கள் அதிக அபராதம் மற்றும் வட்டியுடன் வரிகளை எதிர்கொள்கின்றன. இது குறிப்பிடத்தக்க நிதிச் சுமைக்கு வழிவகுக்கும்.

• நற்பெயருக்குச் சேதம்: உள் மோசடி திட்டங்களை பொதுமக்கள் வெளிப்படுத்துவது ஒரு நிறுவனத்தின் நற்பெயரை கடுமையாக சேதப்படுத்தும். முதலீட்டாளர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் பங்குதாரர்கள்

நம்பிக்கையை இழக்க நேரிடலாம், வணிக உறவுகள் மற்றும் எதிர்கால நிதி வாய்ப்புகளை பாதிக்கலாம்.

• அதிகரித்த ஆய்வு: உள் மோசடி விசாரணைகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் எதிர்கால வரித் தாக்கல்களுக்காக வரி அதிகாரிகளிடமிருந்து அதிக ஆய்வுகளை எதிர்கொள்ளக்கூடும். இது நேரத்தைச் செலவழிக்கும் மற்றும் வளம் மிகுந்த செயன்முறையாக இருக்கலாம்.

### அரசாங்கத்திற்கு ஏற்படக்கூடிய தாக்கம்:

• இழந்த வரி வருவாய்: பல்வேறு நிறுவனங்களில் உள்ள உள் மோசடி அரசாங்கத்திற்கான வரி வருவாயை மிகவும் பாதிக்கின்றது. இது முக்கியமான பொதுச் சேவைகள் மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்கான நிதியைக் குறைக்கின்றது.

• திறமையற்ற வள ஒதுக்கீடு: சந்தேகத்திற்குரிய உள் மோசடி வழக்குகளை விசாரிக்க வரி அதிகாரிகள் கூடுதல் ஆதாரங்களை அர்ப்பணிக்க வேண்டியிருக்கலாம். வழக்கமான வரி வசூல் நடவடிக்கைகளில் இருந்து ஆதாரங்களை திசைதிருப்பலாம்.

• பொது நம்பிக்கையை குறைத்தல்: உள் மோசடி வரி வருவாயை குறைக்க வழிவகுத்தால், வரி முறை நியாயமற்றது மற்றும் பயனற்றது என்று பொதுமக்கள் உணரலாம். இது அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையையும், பொது நிதியை பொறுப்புடன் நிர்வகிக்கும் அதன் திறனையும் சிதைத்துவிடும்.

• இணங்குவதற்கான ஊக்கமளிப்பு: மற்றவர்கள் வரி மோசடியில் இருந்து தப்பிக்கிறார்கள் என்று நிறுவனங்கள் உணர்ந்தால், அது நேர்மையான வணிகங்களை வரி விதிமுறைகளுக்கு இணங்குவதை ஊக்கம் அளிக்காமல் அமைவதனால், இது ஒரு தீய சுழற்சியை உருவாக்குகின்றது.

### எடுத்துக்காட்டுகள்:

• மோசடி ஒரு ஊழியர் நிறுவனத்திலிருந்து நிதியை மோசடி செய்தால், அந்த நிதி வருமானமாக அறிவிக்கப்படாது, இது வரிகளைக் குறைவாக செலுத்துவதற்கு வழிவகுக்கின்றது.

• போலி விலைப்பட்டியல்கள்: விலைப்பட்டியல்களை உயர்த்துவது அல்லது போலியானவற்றை உருவாக்குவதன் மூலம் நிதியை வெளியேற்றுவது அதிக செலவுகள் மற்றும் வரிக்கு உட்பட்ட வருமானத்தைக் குறைக்கலாம்.

• ஊதிய மோசடி: போலியான ஊழியர்களை உருவாக்குவது அல்லது ஊதியப் பதிவுகளை உயர்த்துவது மோசடி செய்பவர்கள் நிறுவனத்தின் நிதிகளைத் திருடவும், ஊதிய வரிகளை செலுத்துவதைத் தவிர்க்கவும் அனுமதிக்கின்றது.

### பரிந்துரைகள்:

• வலுவான உள்ளகக் கட்டுப்பாடுகள்: கடமைகளைப் பிரித்தல் மற்றும் வழக்கமான தணிக்கைகள் உட்பட நிதிச் செயன்முறைகள் மீது நிறுவனங்கள் வலுவான உட்கட்டுப்பாடுகளை செயற்படுத்த வேண்டும். இது வரித் தாக்கல்களை பாதிக்கும் முன் மோசடி நடவடிக்கைகளைக் கண்டறிந்து தடுக்க உதவும்.

• வரி இணக்கப் பயிற்சி: வணிகங்கள் ஊழியர்களுக்கு அவர்களின் வரிக் கடமைகள் மற்றும் உள் மோசடித் திட்டங்களுடன் தொடர்புடைய அபாயங்கள் குறித்துக் கற்பிக்க வேண்டும்.

• அரசாங்க ஒத்துழைப்பு: உள்நாட்டு மோசடிகளைத் தடுப்பதற்கும் வரி இணக்கத்தை மேம்படுத்துவதற்கும் சிறந்த நடைமுறைகளை உருவாக்க, தொழில் சங்கங்களுடன் அரசாங்கங்கள் ஒத்துழைக்கலாம்.

• தகவல் தருவோர் பாதுகாப்பு: இரு நிறுவனங்களும் அரசாங்கங்களும் வலுவான விசில்ப்ளோவர் பாதுகாப்புத் திட்டங்களைக் கொண்டிருக்க வேண்டும், இது பழிவாங்கும் பயம் இல்லாமல் சந்தேகத்திற்குரிய வரி மோசடியைப் புகாரளிக்க ஊழியர்களை ஊக்குவிக்கும்.

ஒன்றாகச் செயற்படுவதன் மூலம், நிறுவனங்களும் அரசாங்கங்களும் வரி வசூல் மற்றும் இணக்கத்தின் மீதான உள் மோசடியின் எதிர்மறையான தாக்கங்களைத் தணிக்க முடியும். இது நியாயமான வரி முறையை உறுதி செய்யும். அரசாங்கங்களுக்கு மிகவும் தேவையான வருவாயை உருவாக்கி, மேலும் நெறிமுறையான வணிகச் சூழலை ஊக்குவிக்கும்.

அனைத்து அளவிலான வணிகங்களுக்கும் உள் மோசடி ஒரு தீவிர அச்சுறுத்தலாகும். உள் மோசடியைத் தடுக்க நடவடிக்கை எடுப்பதன் மூலம், வணிகங்கள் தங்கள் சொத்துக்களையும், நற்பெயரையும் பாதுகாக்க முடியும்.

### உள் மோசடியைத் தடுப்பதற்கான சில கூடுதல் குறிப்புகள் பின்வருமாறு:

• உங்கள் நிறுவனம் மோசடிக்கு மிகவும் பாதிக்கப்படக்கூடிய பகுதிகளைக் கண்டறிய வழக்கமான மோசடி ஆபத்து மதிப்பீடுகளை நடத்தவும்.

• மோசடி என்றால் என்ன என்பது குறித்த தெளிவான மற்றும் சுருக்கமான கொள்கைகளை ஊழியர்களுக்கு வழங்கவும்.

• மோசடி செய்வதால் ஏற்படும் விளைவுகளை ஊழியர்கள் புரிந்துகொள்வதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

• உங்கள் உள் கட்டுப்பாடுகளை தவறாமல் மதிப்பாய்வு செய்து புதுப்பிக்கவும்.

இந்த உதவிக்குறிப்புகளைப் பின்பற்றுவதன் மூலம், வணிகங்கள் உள் மோசடியைத் தடுக்கவும், கண்டறியவும் உதவும்.

உள் மோசடி ஒரு தொடர்ச்சியான அச்சுறுத்தலாக உள்ளது, பல அடுக்குப் பாதுகாப்பு மூலோபாயத்தைக் கோருகின்றது. மோசடி செய்பவர்கள் பயன்படுத்தும் குறிப்பிட்ட தந்திரோபாயங்களைப் புரிந்துகொள்வதன் மூலமும், இலக்குத் தணிப்பு நடவடிக்கைகளை செயற்படுத்துவதன் மூலமும், நிறுவனங்கள் தங்கள் பாதிப்பைக் கணிசமாகக் குறைக்கலாம்.

தொடர் கண்காணிப்பு முக்கியமானது. நினைவில் வைத்து கொள்ளுங்கள், உள் மோசடித் திட்டங்கள் சிக்கலானதாகவும் தொடர்ந்து உருவாகுவதாகவும் இருக்கும். உங்கள் நிறுவனத்தில் ஒரு விழிப்புணர்வு கலாச்சாரத்தை பராமரிப்பது முக்கியம். கருத்தில் கொள்ள வேண்டிய சில கூடுதல் புள்ளிகள் பின்வருமாறு:

• பேசும் கலாச்சாரத்தை ஊக்குவிக்கவும்: பழிவாங்கும் பயம் இல்லாமல் சந்தேகத்திற்குரிய மோசடியைப் புகாரளிக்க ஊழியர்களை ஊக்குவிக்கவும். அநாமதேய புகாரளிக்கும் ஹாட்லைன்கள் அல்லது பணியாளர்கள் கவலைகளைத் தெரிவிக்க மற்ற பாதுகாப்பான சேனல்களை நிறுவவும்.

• மோசடி விழிப்புணர்வு பயிற்சியில் முதலீடு செய்யுங்கள்: உள் மோசடித் திட்டங்கள், சிவப்புக் கொடிகள் மற்றும் நெறிமுறை நடத்தையின் முக்கியத்துவம் குறித்து ஊழியர்களுக்கு தொடர்ந்து கல்வி கற்பித்தல்.

• தகவலுடன் இருங்கள்: சமீபத்திய உள் மோசடிப் போக்குகளைத் தெரிந்துகொள்ளுங்கள் மற்றும் அதற்கேற்ப உங்கள் தணிப்பு உத்திகளைப் பின்பற்றுங்கள். தொழில் சங்கங்கள் மற்றும் தொழில்முறை நிறுவனங்கள் தகவல்களைத் தெரிந்துகொள்ள மதிப்புமிக்க ஆதாரங்களாக இருக்கும்.

தடுப்பு நடவடிக்கைகள், துப்பறியும் கட்டுப்பாடுகள் மற்றும் நெறிமுறைகளின் கலாச்சாரம் ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் ஒரு விரிவான அணுகுமுறையைப் பயன்படுத்துவதன் மூலம், நிறுவனங்கள் தங்கள் உள் மோசடி அபாயத்தை கணிசமாகக் குறைக்கலாம் மற்றும் அவர்களின் நிதி நல்வாழ்வைப் பாதுகாக்கலாம். நினைவில் கொள்ளுங்கள், உள் மோசடி வணிகம் செய்தல் தவிர்க்க முடியாதது அல்ல. செயலூக்கமான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலமும், ஒருமைப்பாட்டின் கலாச்சாரத்தை வளர்ப்பதன் மூலமும், நிறுவனங்கள் மிகவும் பாதுகாப்பான சூழலை உருவாக்கி, நிலையான வெற்றியை அடைய முடியும்.

+94-777-802-900 | Email: swaminathan@agsarma.com

# முல்லை ஓய்வு நகர்
# Mullai Rest City

## எழுதுமட்டுவாழ் நகரில்
## 2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

**உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.**
**மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்**
**அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்**

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்






4th Project

இது ஒரு **கற்பகவனம்** செயற்றிட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

**தொடர்புகளுக்கு: 0777 43 5557**

இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.04.2024இல் வெளியிடப்பெற்றது.